

முத்திதழ் – 05
மே/ஜூன் 2021

# முத்திதழ்

MUTHTHITHAL
මුත්තිදල්

நீ. நான்.. நாம்...

முதுசத் தொகுப்பு



## பொதுப் போக்குவரத்து தரிப்பிடம்



## கல்விக்காக திருகோணமலை நோக்கிய படையெடுப்பு



## தரமுயர்வு பெறும் மூதூர் மகன்

ரூ. 70/=
மாதாந்த சிற்றிதழ்

மாதாந்த இதழ்

# முத்திதழ்

முத்துப்படைப்புகளின் தொகுப்பு

Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk

SCAN ME

## எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்

www.muththizhal.com | +94 740818782 | Mutur | Muththizhal

## முத்திதழின் கடந்த கால வெளியீடுகள்




JANUARY




FEBRAURY




MARCH




APRIL


## SHABNAM Curtain Center

SCC SHABNAM CURTAIN CENTRE RESHAPE YOUR HOME

Reshape Your Home

சப்னம் கேட்டின் நிறுவன வடிவமைப்பாளர் அல்~ஹாஜ்.நிசார் அவர்களின் கைவண்ணத்தில் தயார் செய்யப்படும் கேட்டின் வகைகளைத் தெரிவு செய்ய

- ரோயல் கேட்டின் டெகோர் மூதூர்~02 சேர்ச் ரோட்
- சப்னம் கேட்டின் வடிவமைப்பு நிலையம் மூதூர்~04 லேக் ரோட்



076 374 1070 | 075 256 9006 | shabnam curtain centre mutur

## MUTUR BABY CARE

Cheap & Best

மூதூர் பேபி கெயார்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான அனைத்த விதமான பொருற்களையும் மற்றும் சிறுவர்கள், குழந்தைகளுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருற்களை தரமாகவும், நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

LIMITED TIME OFFER

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான பொருற்களை மொத்தமாக பெற்றுக்கொள்பவர்களுக்கு 650/- ரூபாய் பெறுமதியான பார்த்பேசன் இலவசமாக வழங்கப்படும்.



0772258658
0757577521
Main Street, Mutur -01
Mutur Baby Care

Prop : M.K.M Nihar

## Friendly Cafe




**SPECIAL MENU**

- Egg Drop Soup with Beef
- Malay Chicken Sandwich
- Crispy Fried Chicken
- Fried Fish
- Friendly Burger

ORDER NOW
+94 77 237 236 0
+94 75 75 42 42 2

friendlycafeinfo@gmail.com

Batticaloa Road, Periyapalam
Mutur - 05, Sri Lanka

முத்திதழ்
நீ, நான்.. நாம்...

இதழ்-05 மே / ஜூன் 25 2021




Pages - 26
Size - A4
Location - Mutur
Category - Magazine
Layout By - Sanoos.tm
Adz Partner - MP News

Contact - +94 740818782
Gmail - muththizhal.lk@gmail.com
Social Media - Muththizhal
Address - Jaya Road, Mutur.

பிரதம ஆசிரியர்
JUNAID MOHAMED IHSHAN
துணை ஆசிரியர்
Abdul Cader Mohamed Asmy
ஆலோசனைக் குழு
*M.S. Amanullah (Retd. Principal)*
*Dr. A. Sathees Kumar (MBBS)*
*Ashseikh N.M. Nisath (Naleemi)*
*A.S. Mubarak (Retd. Librarian)*
*J.M. Basith (Dirct. of SKY Tamil)*

**Rs : 70/=**

மூதூர் வலய உயர்தரப் பெறுபேறு பகுப்பாய்வு - பக் 10
இன நல்லுறவில் மூதூர் இலக்கியம் - பக் 07
மூதூர் அனர்த்த உதவி
பொதுப் பேரூந்து தரிப்பிடம் - பக் 09
இயன் மருத்துவம் - பக் 06
மூதூர் வரலாறு – பேரா.செ.சுந்தரலிங்கம் - பக் 21
நீரிழிவு நோய் - பக். 08
கல்வியூடாக எதிர்பார்க்கப்படும் மானுட..... - பக். 16
LinkedIn பயன்படுத்துங்கள் - பக். 16
நேர்காணல் – மூதூர் கலைமேகம் - பக். 04
முத்திதழ் EID CLICKS - பக். 24

## ரமழான் போட்டி நிகழ்ச்சி குலுக்கள்



# ஆசிரியர் மடல்

கொரோனா அச்சுறுத்தலான சூழலில் எமது அன்றாட செயற்பாடுகள் நாட்டு விதிமுறைக்கு அமைவாக ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். அத்தோடு நோன்பு பெருநாள் நிகழ்வுகள் அமைதி யோடும் கண்ணியத்தோடும் மூதூர் பிராந்தியத்தில் சிறப்புற நடைபெற்றது.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பல முன்னணி பாடசாலைகளில் இருந்து போதுமான அடைவுகள் பெறப்படவில்லை. குறிப்பாக இம்முறை பொறியியல் துறை திருப்திகரமாக வெளிக்காட்டப்பட்ட போதிலும் உயிரியல் விஞ்ஞான துறைக்கான அடைவுகள் மற்றும் இம்முறை மூதூர் நகர்ப்புற பிரதேசத்தில் மருத்துவ துறைக்கு எந்தவொரு மாணவரும் தேர்வு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இந்நாட்களில் பாரிய பின்னடைவை எதிர் நோக்குவதாக அவதானிக்க முடிகின்றது.

நோன்பு பெருநாளை எதிர்பார்த்து கொள்வனவு செய்யப்பட்ட பல ஆடை விற்பனை நிலையங்கள் மூதூரில் உண்டாக்கிய கொரோனா கட்டுப்பாடுகளை மதிப்பளித்து தங்கள் வியாபார தளங்களை மூடி ஊரின் சுகாதார நடைமுறைக்கு ஒத்துழைப்பு நல்கியமை தொடர்பில் பொது சுகாதார மருத்துவர், பொலீஸ் பொறுப்பதிகாரி மற்றும் வர்த்தக சங்கம் சார்பிலான நன்றிகளை தெரிவித்தனர்.

சமூக அமைப்பில் பயணிக்கும் நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் பொறுப்பாளர்களாக தொழிற்படுகின்றோம் என்பதை மீண்டும் மீண்டும் அன்றாட சம்பவங்கள் நினைவூட்டுகின்றன.

மூதூர் மக்கள் சார்பாக

வாழ்த்துகிறோம்



## இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இற்கு தரமுயர்வு பெற்றுள்ளார் எம்.எம். ஜவாத்

2019-Feb-19 ஆம் திகதிய பதவிநிலை தரமுயர்விற்கு அமைவாக மாகாண கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் எம்.எம். ஜவாத் அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I நிலைக்குத் தரமுயர்வு பெற்றுள்ளமைக்கு மூதூர் மக்கள் சார்பிலான மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர் கே / தெஹி கன்னந்தோட்ட மற்றும் மாவனல்லை சாஹிரா கல்லூரி தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபராகக் கடமையாற்றியதோடு, மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தின் முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

ஜாமியா நளீமியாவின் பட்டதாரியான இவர், ஓர் சட்டத்தரணியுமாக தனது பட்டத்தை நிறைவுசெய்துள்ளதோடு, தற்போது கிழக்கு மாகாண கல்விப் பணிமனையின் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# 2020 A/L
# மருத்துவம், பொறியியல் பீடம் தெரிவான மாணவர்கள்



**LAFEER MOHAMED THEESHAN**
T/MU/ALHILAL CENTRAL COLLEGE
PHYSICAL SCIENCE
Dis.Rank - 03



**MOOMEN MOHAMED SALMAN**
T/MU/ALHILAL CENTRAL COLLEGE
PHYSICAL SCIENCE
Dis.Rank - 23



**KALEEL FATHIMA HANA**
T/T/SANMUHA HINDU COLLEGE
BIO SCIENCE
Dis.Rank - 12



**KALEELUR RAHMAN AYAS RAHUMAN**
T/T/KONESWARA HINDU COLLEGE
BIO SCIENCE
Dis.Rank - 09



**NAWAS AASHIF AHAMED**
T/T/ZAHIRA COLLEGE
BIO SCIENCE
Dis.Rank - 11




## சிறுவர் சித்திரப்போட்டியில் தேசிய சாதனை சியாஉல் ஹஸன்

நாடளாவிய ரீதியில் நடைபெற்று முடிந்த பாடசாலை மட்டங்களுக்கிடையிலான சித்திரப் போட்டியில் தரம் 8 இல் கல்விபயிலும் தி/மூ/அல்-மினா மகா வித்தியாலய மாணவன் சியாவுல் ஹஸன் என்பவர் தெரிவாகியுள்ளார்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போட்டியில் தேசிய ரீதியில் 4375 மாணவர்கள் கலந்து கொண்டதில் இம்மாணவன் முதலிடம் பெற்று இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இப்போட்டியில் வெற்றிபெற்றமைக்கான ஊக்குவிப்பு பரிசாக 100,000/= பெறுமதியான கணினி, 10,000/= வங்கி வைப்பு, கற்றல் உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இதற்காக முயற்சி செய்த பெற்றோர், ஆசிரியர் பாடசாலை சமூகம் ஆகியோருக்கு பாராட்டுக்களை தெரி வித்துக் கொள்கின்றோம்.



## தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப (ஐஊவு) போட்டி பரீட்சையில் நாடளாவிய மட்ட முதலிடம்

மூதூர் மத்திய கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் Mohamed Fawwaz Mubarak அவர்கள் 2021 ஆம் ஆண்டுக்கான ICT & Design Technology என்ற தலைப்பில் தேச ரீதியில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று இச்சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

மேற்படி போட்டியில் தேசிய ரீதியில் 50 மாணவர்களுக்கே பங்கேற்க சந்தர்ப்பம் அளிக்கப்படுவதோடு மூதூர் சார்பில் முபாரக் முஹம்மது பவாஸ் கலந்துகொண்டு 200 புள்ளிகளுக்கு 198 புள்ளியை பெற்றுள்ளமையும் விஷேட அம்சமாகும்.

இதற்கு முன்னரும் இம்மாணவன் தேசிய ரீதியில் 2019 ஆம் ஆண்டு மீலாதுன் நபி விழா போட்டியில் நான்காம் இடமும், மாகாண மட்ட ரீதியில் ஆங்கிலக் கட்டுரைப்போட்டியில் மூன்றாம் இடமும்பெற்று சாதனை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

# முத்திதழ் வாழ்த்து

## Mathematics Olympiad Competition 2021





பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சியில் மாகணமட்ட போட்டியில் மூதூரைச் சேர்ந்த இரு மாணவர்கள் தேர்வு.

- **பஸ்ரி ஹைசாம் ஹகீம்**
  தரம் 08 - தி/மூ/மூதூர் மத்திய கல்லூரி (தே. பா)
- **நஷார் இஸ்திகா ஹஷ்ணி**
  தரம் 8 - தி/மூ/அந்-நஹ்றார் மகளிர் மகா வித்தியாலயம்

தேசிய மட்டத்தில் கணித திறன் ஒப்பீட்டு போட்டி நிகழ்ச்சியாக நடாத்தப்படும் ஒலிம்பியாட் போட்டி நிகழ்ச்சியில் எமது ஊரைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்று சாதனை படைத்துள்ளமைக்கு மூதூர் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு இம்மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் இவ்விடத்தில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது முத்திதழ் குழுமம் சார்பில் மென்மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறோம்.

## இலங்கை Super League உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மூதூர் நடுவர் பங்கேற்பு




நாடளாவிய ரீதியில் நடைபெறும் முன்னணி உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியே சூப்பர் லீக் சுற்றுத்தொடர். சுகததாச அரங்கில் நடைபெற்ற இப் போட்டியில் மூதூரைச் சேர்ந்த அன்ஸார் முஹம்மது ஷபீருள் ஹசன் அவர்கள் நடுவராக பங்கேற்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் 21 வயதில் தேசிய ரீதியான நடுவர் குழாமில் அங்கத்துவம் பெற்று மேற்படி சுற்றுத்தொடரில் நடுவராக கடமையாற்றிய பெருமையை பெற்றுள்ளார்.

விளையாட்டு துறையில் அதீத ஈடுபாடு கொண்ட ஷபீருள் ஹசன் எதிர்கால பயணம் சிறக்க முன்கூட்டிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# நேர்காணல்

**பெயர் - அபூபக்கர் செய்து இபராஹிம்**
**புனைப்பெயர் - கலைமேகம்**
**பிறப்பு - 1943/07/09 (71 வயது)**
**துறை - முத்துரை எழுத்தாளரும் இலக்கியவாதியும்**
**துணைவி - உம்மு பரீதா தங்கம்**
**பிறப்பிடம் - மூதூர் மத்தி / 6ஆம் வட்டாரம்**
**தந்தை - கலீபா ஷாகிப் அபூபக்கர்**
**தாய் - முஹைதீன் பீவி**

**நேர்கண்டவர் : இஹ்ஸான் ஜே.எம்.ஐ**

### இலக்கிய பயணத்தில் உங்களைப் பற்றிய அறிமுகத்தை கூறுங்கள்

1956 ஆம் ஆண்டு மூதூர் 6 ஆம் வட்டாரத்தில் படித்த வாலிபர்களான சே.மு.அக்பர், சதக்கு முஹமது, எம்.அக்பர், எம்.ஜூனைது, அ.க.ஆப்தீன், மு.க.சுபைர் போன்ற நபர்களின் மூலமாக அல்லாமா இக்பால் சனசமூக நிலையம் ஒன்றை ஸ்தாபித்தனர். இந்நிறுவனம் வாசிகசாலை, விளையாட்டு, சமூக சேவைகள் என்று மூன்று பிரதான துறைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதே காலப்பகுதியில் நானும் ஒரு அங்கத்தவராக நூலகப் பொறுப்பை எடுத்துக்கொண்டேன். நூலகத்திற்கு வரும் பத்திரகை, சஞ்சிகை, நூல்கள் போன்றவற்றை வாசிப்பதனூடாகவே எழுத்துத் துறையில் ஆர்வம் ஏற்பட்டது.

அல்லாமா இக்பாலின் புரட்சி கவிதைகள் என்னை கவிதையின்பால் முனைப்படையச் செய்தது. இதன் காரணமாக சிறு சுறு கவிதைகளை ஆரம்பத்தில் எழுதி வ.ஆ. இராசரத்தினம் (நாவலாசிரியர்), அருள் சுப்ரமணியம் (அதிபர், சிறுகதை எழுத்தாளர்) போன்றோரிடம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டேன். அத்தோடு எனது தந்தை இந்திய வவ்சாவளியகவும், சிறந்த இலக்கிய வாதியுமாக இருந்தமையும் இலக்கிய ஆற்றல் குடிகொள்வதற்கு ஏதுவானது எனலாம்.

மூதூர் மண்ணில் அக்காலங்களில் பெரும் பெரும் புலவர்களும் பண்டிதர்களும் வாழ்ந்ததாகக் காணலாம். ஆனால் 80 களுக்கு பின்னர் முழுநேர இலக்கியவாதிகளாக விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரையே கூறமுடியும். அதில் நானும் ஒருவர் என்பதோடு கடந்த அரை நூற்றாண்டுகள் மேலாக இலக்கிய பயணத்தில் எனது வாழ்க்கை நகர்ந்துகொண்டிருக்கின்றமையை மேற்கோள்காட்டியே ஆக வேண்டும்.

### இதுவரைக்குமான உங்களின் இலக்கிய வெளியீடுகள் பற்றிச் சொல்லுங்கள்...

கடந்த 50 ஆண்டுகளில் 3000 கும் அதிகமான கவிதைகளை அதில் அநேகமானவை மரபுக் கவிதைகளாக எழுதியுள்ளேன். இதனூடாக எனது மனைவியின் பெயர்கொண்டு அவருக்கு சமர்ப்பணமாக 2003 இல் 50 கவிதைகளை உள்ளடக்கிய தங்கப்பாலம் என்ற கவிதை தொகுப்பு நூலை கண்டி உடதலாவ பிரதேசத்தை சேர்ந்த புன்னியாமீன் அவர்களின் பங்களிப்போடு வெளியீடு செய்தேன். 2004 ஆம் ஆண்டு மூதூர் 3CD நிறுவனத்தில் அனுசரணையோடு மகரந்தம் என்ற கவிதை தொகுப்பையும் வெளியீடு செய்தேன். இதனைத் தொடர்ந்து 2007 இல் வன்செயல் காவியம் என்று குருந்தொகுப்பை வெளியீடு செய்தேன்.

கவிதைக்கு அப்பால் 28 சிறுகதைகளை எழுதி அதில் 5 சிறுகதை போட்டியில் பரிசு வென்றதோடு 13 சிறுகதைகள் பத்திரிகையில் பிரசுரம் ஆனது. மேலும் கட்டுரைகள் பல எழுதியுள்ளேன். அதில் இலக்கியம் வளர்த்த மூதூர், மூதூர் முஸ்லிம்களின் அக்கால கட்ட வழக்காறுகள் என்ற தலைப்புக்கள் நாடளாவிய ரீதியில் பேசப்பட்ட ஆவணக் கட்டுரைகளாகக் கருதமுடியும்.

### நீங்கள் இதுவரை இலக்கியவாதியாக பெற்றுக்கொண்ட விருதுகள் என்னென்ன?

ஈழமேகம் பக்கீர் தம்பி (தமிழ்நாட்டு பண்டிதர்) அவர்கள் மூலமாக 1969 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண மட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற காரணத்தினால் கலைமேகம் என்ற பட்டம் முதலாவது வழங்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து,

- 2004 இல் தேசிய மீலாது நபி விழாவில் ‘பொற்கிழி விருது’.
- 2007 இல் கிழக்குமாகாண சபை கலை விழாவில் ஆளுநர் விருது .
- 2007 இல் தினமின, தினகரன் விழாவில் கலாசூரி விருது.
- 2007 இல் முஸ்லிம் கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது.
- 2008 இல் திருகோணமலை நகர நூலக சபை ஊடாக கலர் தீபம் என்ற விருது
- 2008 இல் மூதூர் மதார் நிதியமூடாக கலை முரசு விருது
- 2009 இல் காசிம் உமர் நூல் வெளியீடு ஊடாக கலை நேசன் விருது
- பெற்றுக்கொண்டதோடு பல உள்ளூர் நிறுவனங்கள், அமைப்புகள், அரச நிறுவனங்கள் மூலமாக கௌரவிப்பு வெகுமதிகளும் பெற்றுக்கொண்டுள்ளேன்.

### இலக்கிய வாழ்வில் எதிர்கொண்ட சவால்கள் என்ன

சவால்கள் என்று கூறும்போதும் அக்காலத்தில் சமூக நடைமுறையில் தமிழ் மூலமான வெளியீடுகள் சமயம் சார்ந்து இருந்தமையினால் எனது ஆக்கங்கள் பல்லின சமூகத்தையும் சார்ந்து காணப்பட்டமை விமர்சன ரீதியில் எனது படைப்புகள் எமது ஊரில் வரவேற்ப்பு குறைவாகவே இருந்தது. இருந்தபோது தேசிய ரீதியில் இலக்கிய ஆளுமைகள் மத்தியில் எனக்கென ஒரு அங்கீகாரத்தை பெற்றுகொண்டதுதான்.

தமிழின் இனிமை, அதன் பண்புகளின் மீதான அதீத தாக்கம் காரணமாக மரபுக்கவிதிகள் இலக்கண விதிமுறைகளை சார்ந்து நல்ல சொற்களை கொண்டு வெளியீடு செய்ய வேண்டிய கடப்பாடு எனக்குண்டு. இதனை தவறாகவும், மார்க்க வரையறையை மீறுவதாகவும் சில விமர்சகர்கள் குற்றம் சாட்டினார்கள். அத்தோடு காதல் கவிதைகளை வெளியீடு செய்வதில் அக்காலம் பாரிய சவால்மிக்கதாக அமைந்தது.

இவற்றுக்கு மேலாக எழுதிய ஆக்கங்களை பிரசுரம் செய்வதில் உள்ள நடைமுறை சிக்கல், நூல்களை வெளியீடு செய்வதில் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கும் பொருளாதார பிரச்சினை போன்றவை நான் முகம் கொடுக்கும் சவால்களாகும்.

குறிப்பாக என்னைப்பற்றிய சரிதை நூலை தொகுத்து வைத்துள்ளேன். அதனை வெளியீடு செய்வதற்கான சந்தர்ப்பம் தான் இன்னும் நான் எதிர்கொள்ளும் பாரிய சுமையாகவும் சவாலாகவும் கருத முடிகின்றது.

### மூதூர் இலக்கிய துறைக்கு உங்களின் பங்கு பற்றி கூறுங்கள்

தற்போதுள்ள இலக்கிய ஆளுமைகளான அமானுல்லா, மீரா முஹைதீன், உபைதுல்லா, கே.எம்.இக்பால் போன்றோருக்கு எனது அழகிய அறிவையும், வழிகாட்டல்களையும் அளித்துள்ளேன். இலக்கிய துறையில் ஆய்வு செய்யப்பட ஆவண கட்டுரைகளை வெளியீடு செய்ததோடு மாணவர்கள், பல்கலைக்கழக பட்டதாரிகளின் ஆய்வுகளுக்கும் என்னால் இயன்ற இலக்கிய பங்களிப்பை அளித்துள்ளேன்.

### புதிய தலைமுறைக்கு நீங்கள் முன்வைக்கும் கருத்து.

இலக்கியம் காலத்தில் கண்ணாடி.. சமகாலத்தில் எழுந்துள்ள சமூகவியல் ரீதியிலான பிளவுகளுக்கு இலக்கியம் மிகப்பெரிய இணைப்பு பாலமாக அமையும். இலக்கிய பயணத்தில் தற்போதுள்ள முன்னோடிகள் வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்கள், வாசகர்களை கொண்டு இலக்கிய சந்திப்புகள், இலக்கிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்வனூடாக சமூகத்தில் இலக்கிய மீள் கட்டுமானத்தை உண்டாக்கி மூதூர் இலக்கிய துறைக்கு பங்காற்ற முடியும்.

அத்தோடு வாசிப்பு திறன் மந்தமானதனால் புதிய தலைமுறையினை சார்ந்து தற்போது இலக்கிய ஆளுமைகள் உருவாகும் விதம் மூதூர் முஸ்லிம் சமூகத்தில் பின்னடவை நோக்கி பயணிப்பதைக் காணலாம். இதனை முதலில் சீர் செய்வதற்கான ஒழுங்குகளை மூதூர் கலை இலக்கிய மன்றம் முன்னெடுக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட அவா.



# மாயை விலகிய போது



சிறுகதை



சுஸானா முனாஸ்
ஓய்வுபெற்ற ஆசிரியை
மூதூர்..



காலைச் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் பட்டு அந்தக் கடல் பொன்போல் மின்னிற்று. வெள்ளை நுரை அலைகள். வெண் பட்டு விரித்தாற் போன்றிருந்த அந்த வெண் மணற் பரப்பை வெகு ஆசையுடன் முத்தமிட்டு திரும்பிற்று. அந்தக் காலை வேளையில் மிக அற்புதமாய் தெரிந்த அந்தக் கடற்கரையின் அழகைக் கண்களால் பருகியபடி. அந்தக் கடற்கரை சாலையில். இதமாக உடலை வருடிச் செல்லும் தென்றலின் சுகத்தை ரசித்தபடி காலாற நடந்துகொண்டிருந்த ஜாபிர் ஹாஜியாரின் விழிகள் வியப்பில் விரிந்தன.

அந்தக் கடற்கரையோரத்தில் வந்து நின்ற அழகிய விலை உயர்ந்த கருநிற காரின் உள்ளிருந்து இறங்கிய ஒருவர் காரின் டிக்கியை திறந்து. அதனுள் மடித்து வைத்திருந்த ஒரு தள்ளு வண்டியை எடுத்து திறந்து காரின் அருகே நிலத்தில் வாகாக வைத்தார். பின் காரின் பின் கதவை திறந்து உள்ளே இருந்த எழுபது எண்பது வயது மதிக்கத்தக்க மெலிந்த உருவத்துடன் இருந்து பெண்மணியே அலாக்கா தூக்கி அந்த தள்ளுவண்டியில் வசதியாக உட்கார வைத்தார் முன்னாலிருந்து பெல்ட்டை பாதுகாப்பாக கட்டினார் காரின் முன் இருக்கையில் இருந்து இறங்கிய பெண் அவரின் மனைவியாக இருக்க வேண்டும் ஆனும் பெண்ணுமாய் காரில் இருந்து இறங்கிய இரண்டு சிறுவர்களின் கைகளை பிடித்தபடி அருகில் வந்தாள் காரின் பின் கதவை திறந்து இறங்கிய 40 வயது மதிக்கத் தக்க பெண் அவர்களின் வேலைக்காரியாக இருக்கவேண்டும்.

எல்லோரும் இறங்கியதும் காரின் கதவுகளைப் பூட்டிக்கொண்ட அந்த மனிதர் தள்ளு வண்டியில் பாதையோரத்தில் இருந்த படிக்கட்டுகளில் மெதுவாக இறக்கி. புல்வெளிக்கு நடுவே ஓடியே சீமெந்துப் பாதையில் தள்ளிக் கொண்டு கடற்கரையை நோக்கிப்போக ஆரம்பித்தாள். வெண் மணற்பரப்பின் அருகே கட்டப்பட்டிருந்த அந்த கட்டின்மேல் தள்ளுவண்டியைக் கொண்டு நிறுத்தினார். பின்னாலே அவரது குடும்பமும் நகர ஜாபிர் ஹாஜியாரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

அந்தப் பெண்மணி பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஒரு கை இயங்கவில்லை என்பது பார்த்தாலே தெரிந்தது. மெல்லிய புன்னகை கோடாய் நெளிய அவரின் பார்வை கடலை நோட்டமிட்டது. அவரிடம் குனிந்து மென்மையான குரலில் அந்த மனிதர் ஏதோ பேசப் புரிந்துகொண்டாற்போல் அந்தப் பெண்மணியின் தலை சற்று அசைந்தது ஜாபிர் ஹாஜியாருக்கு எல்லாமே வியப்பாய் இருந்தது அவர்கள் அருகே நெருங்கியவர் அந்த மனிதரைப் பார்த்து சினேகமாய் புன்னகைத்தார். ஸலாம் சொன்னார். பதில் ஸலாம் சொன்னவரிடம். வெளியூரா? என்று கேட்டார் நட்புடன்.

ஆமாம். நாங்க கண்டியிலிருந்து வாரம். என்றார் அவர். "என் பெயர் ஜாபீர் இங்கதான் நான் கடை வச்சிருக்கேன் என்றார் இவர் தன்னை அறிமுகப் படுத்தும் வகையில்". அப்படியா? என் பெயர் டொக்டர் தாசிம் கண்டி ஹாஸ்பிடல்லதான் இருக்கேன். இவங்க என்னோட உம்மா இவங்க என்னோட வைஃப் பிள்ளைகள் இவங்க எங்களோட உதவிக்கு இருக் காங்க. என்றவளின் வார்த்தைகளில் கண்ணியம் தெரிந்தது.

"உம்மாவுக்கு ரொம்ப நாளா வருத்தமா..?" ஜாபிர் ஹாஜியார் வினவினார்.

"ஆமாம் பத்து வருஷம் ஆகிறது. வாப்பா மௌத்தாகியபோது உம்மாவுக்கு ஸ்ரோக் வந்தது. ரொம்ப முடியாம இருந்தாங்க. இப்போ கொஞ்சம் பரவாயில்லை" என்றார் தாசிம் சற்றே வருத்தமான புன்னகையுடன்.

"ஏதும் வைத்தியத்திற்காக இங்கே வந்திறிக் கீங்களா?". "இல்லை இல்லை சும்மா சுத்திப் பார்க்கத் தான் வந்தோம்."

"உம்மாவையும் கொண்டு வாரது கஷ்டமா இல்லையா" ஜாபீர் ஹாஜியாரின் கேள்வியில் வியப்புத் தெரிந்தது.

தாசிமும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அன்போடு மாமியாரின் தோளைப் பற்றிய அவரின் மனைவியின் இதழ்களில் அருமையான புன்னகை. அவர்கள் முகங்களில் அலாதியான அன்பின் கலை தெரிந்தது.

கஷ்டமா..! அது எப்படி எல்லாம் நம்மோட நினைப்பில்தான் உம்மா. இப்போது எங்களோட குழந்தை. நாமும் குழந்தையாய் இருந்தபோது எப்படி எல்லாம் நம்மை வளர்த்திருப்பார்கள் இப்போ இது நம்மளோட நேரம் நாம அவங்களை பார்க்கிற நேரம் எப்படி நம்மளை வளர்க்கும்போது இவங்க சந்தோஷப்பட்டாங்களோ அதேமாதிரி நாம சந்தோஷப்படுகிற நேரம். இதிலென்ன கஷ்டம் இருக்கு.

தாசிம் மென்மையாய் சிரித்தார். அவரின் மனைவியின் ஆமோதிப்பு அவரின் சிறிய புன்னகையுடன் கூடிய தலையசைப்பில் தெரிந்தது.

யாரோ தன்னை சம்மட்டியால் ஓங்கி தலையில் அடிப்பது போன்ற உணர்வில் ஒருகணம் கலங்கிப் போனார் ஜாபிர் ஹாஜியார் முதுமையிலும் நோயிலும் தளர்ந்து போன தன் தாயை குழந்தைபோல் தாங்கும் தாசிம். பிரம்மாண்டமான உருவமாக அவர் முன் தோற்றமளித்தார் அவர் முன்னே சின்னஞ்சிறு தலை இறங்கிப் போன உணர்வில் அவர் உடல் சிலிர்த்தது. மனைவியின் விருப்பத்திற்கு எதிராக விரல் அசைக்க துணிவின்றி பெற்ற தாயை தன்னந்தனியே தவிர்க்க விட்டிருக்கும் தன்னை நினைத்து மனதில் குறுகிப் போனார் அவர்.

தகப்பனை சின்னஞ்சிறு வயதில் இழந்திருந்த போதிலும் அந்த இழப்பின் வலி தெரியாதவாறு தன்னை வருத்தி தங்களை ஆளாக்க தன் தாய் எத்தனை கஷ்டப்பட்டு இருந்தார் என்பதை உணர்ந்திருந்த போதிலும் தன் செல்வந்தர் மனைவியின் விருப்பத்திற்கிணங்கி தன் கிராமத்திலேயே வாழும் தன் தாயைப் பற்றி சிறிதும் அக்கறையின்றி இருந்தார் அவர்.

தன் பிழைப்புக்காக சிறிய பெட்டிக் கடை ஒன்றை நடத்தி வந்தார் ஜாபிர் ஹாஜியாரின் தாய் ரஹீமா செல்வந்த குடும்பத்தில் இருந்து வந்த ஜாபிர் ஹாஜியாரின் மனைவிக்கு ஆரம்பத்திலிருந்தே மாமியாரைப் பிடிக்காது போயிற்று மருமகளின் குணமறிந்து ரஹீமா விலகிப் போனார் மகள் கணவனுடன் வெளிநாட்டில் வசிக்க தன் கிராமத்திலேயே அந்த சிறு பெட்டிக்கடையில் அவளின் வாழ்க்கை நகர்ந்தது.

எப்போதாவது வரும் ஜாபிர் ஹாஜியார் தன் காரை அந்தப் பெட்டி கடையின் முன் நிறுத்துவார் மகனைக் கண்டதும் ஓடோடி வரும் தாய் "உள்ளே வந்து ஒரு வாய் தேத் தண்ணி குடிச்சிட்டு போவேன்". வாப்பா பிள்ளைகள் வரலையா ஆர்வத்துடன் விசாரிப்பார்.

"எனக்கு நேரமில்லை நான் போகணும் இந்தாங்க" அவர் நீட்டும் ஆயிரமோ இரண்டாயிரமோ வாங்கப் பிடிக்காது ரஹீமாவுக்கு. ஆனாலும் பெற்று பிள்ளையை நோகடிக்க மனம் வராது. கை நீட்டிப் பெற்றுக் கொண்டாலும் முகம் வாடிப்போகும்.

அதை எல்லாம் பார்க்கவோ உணரவோ விருப்பம் இருக்காது அவருக்கு கடமை முடிந்தது என்கிற பாவனையில் அவர் காரில் திரும்பிக் கொண்டிருக்கும்.

பெற்ற தாயிடம் ஒரு ஐந்து நிமிடம் இருந்து சுக துக்கங்களை விசாரிக்க மனம் இருந்ததில்லை என்பதனை நினைக்க இப்போது மனம் கூசிற்று. எத்தனை சுயநலவாதியாய் இருந்து இருக்கின்றேன். என்பது புரிந்தபோது இதயம் கனத்தது தன்னைக் கண்டதும் சூரியனைக் கண்ட தாமரையாய் மலரும் தாயின் முகம் கண்களில் தெரிந்த போது விழியோரத்தில் நீர் துளிர்த்தது. மாயை விலகிய தருணத்தில் அவர் கால்கள் திரும்பி நடந்தன அவரது கார் அந்தக் கிராமத்தை நோக்கி வேகமெடுத்தது

-யாவும் கற்பனையே-

# இயன் மருத்துவம்

## (PHYSIOTHERAPY)

ஓர் பார்வை




Roshan Saleem
Phsiotherapy
Peradeniya University




இயன்முறை மருத்துவமானது இன்று உலக அளவில் ஒரு வளர்ச்சியடைந்த சுயாதீன பயிற்சி (INDEPENDENT PRACTICE) கொண்ட நவீன மருத்துவ முறையாகும். மேலை நாடுகளில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றி வளர்ச்சிய டைந்த இம்மருத்துவமுறை இன்று இலங்கை உட்பட பல நாடுகளில் பரவலாக பின்பற்றப்படும் மருத்துவ முறையாக உருவெடுத்துள்ளது. இயன்முறை மருத்துவமானது, வலியின் வீரியம், அதன் கால அளவு, ஏற்பட்ட இடம், பாதிக்கப்பட்ட பகுதி என்ற அனைத்தையும் வேறு எந்தக் கருவிகளினதும் உதவியின்றி, இயன்முறை மருத்துவரின் கைகளைக்கொண்டு நோய்களை கண்டறிவதுடன் அந்நோயின் தன்மையை ஆராய்ந்து அது எவ்வகையான நோய் (DIAGNOSIS) என்பதைக் கணிக்கக் கூடியதோர் முறைமையாகும். இந்த கைவழி அணுகுமுறையில் தேர்ச்சி பெற்றவர்களாக இயன் மருத்துவர்கள் கருதப்படுகின்றனர்.

இயன் மருத்துவ முறையானது உடலியக்க மருத்துவ முறை எனவும் கூறப்படுகின்றது. இம்முறையில் நோயின் அறிகுறிகளை குணப்படுத்துவதுடன், நோய்க்கான மூல காரணத்தையே முற்றாக குணப்படுத்தும் திறனையும் கொண்டுள்ளது. எனவே இம் மருத்துவ முறை மூலம் மீண்டும் நோய் ஏற்படாது தவிர்ந்துகொள்ளும் அதிகம் வாய்ப்புள்ளது.

அத்துடன் எமது உடல் அமைப்பின்படி உடற் பாகங்கள் அவற்றிற்குரிய இடத்தில் முறையாக அமைந்திருக்கிறதா? குறிப்பாக தசைகளும், எலும்புகளும் முறையாக அமைந்துள்ளதா? என்பதைக் கண் காணித்து, அவற்றுள் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அதைச் சரிசெய்வதே இயன்முறை மருத்துவப் பயிற்சியின் பிரதான நோக்கமாகும்.


உடலியக்க செயல்பாட்டை விஞ்ஞான ரீதியாக அறிந்து உடலியக்கத்தில் காணப்படும் குறைபாடுகளைப் போக்கும் நவீன மருத்துவ வடிவமாக இன்று பிஸியோதெரபி மருத்துவம் வளர்ந்துள்ளது. ஆனாலும் வலியைத் தோற்றுவிக்கும் அனைத்து உடல் குறைபாடுகளையும் பின்விளைவு ஏற்படுத்தாத வகையில் சரி செய்வதற்கும், வலுவிழந்த தசை, தசைநார், நரம்புகளை உடலியக்க அணுகுமுறையில் வலுப்படுத்துவதற்கும் இதயம் தொடர்பான நோய்களை உடலியக்க பயிற்சிகளின் மூலம் சரி செய்வதற்கும், மூளை வளர்ச்சி கோளாறுகள் மேலும் பொதுவாக பெண்களுகளின் உடலியக்க குறைபாடுகள், குறிப்பாக கர்ப்ப காலங்களில் ஏற்படும் உடலியக்க கோளாறுகளை சரி செய்வதற்கும் மற்றும் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை உட்பட அனைத்து அறுவை சிகிச்சைகளுக்கும் மிகவும் தேவைப்படக்கூடிய ஒரு உடன் மருத்துவமாக இயன் மருத்துவம் இன்று வளர்ச்சியடைந்துள்ளதெனலாம். அதாவது நூறு சதவீதம் உடலியக்க நோய்களுக்கான பிரிக்க முடியாத மருத்துவமுறையாக தற்காலத்தில் இயன்மருத்துவ முறைமை இடம்பெறுகின்றது.

இயன்முறை மருத்துவ முறையில் முடிந்தளவு வாய்மூல மருந்துகளை தவிர்க்க முடிகின்றது. மேலும் உடல் கூறியல், உடல் உறுப்புக்களின் செயல்பாடுகள், நுண்ணுயிரியல் , நோயியியல், பொது மருத்துவம் மற்றும் உயிர் வேதியியல், உட்பட அனைத்தையும் கற்றுத் தேர்ந்திருக்கிற இயன்முறை மருத்துவர்களினால் இன்று மக்களுக்கு நரம்பியல் கோளாறு, இதயவியல், எலும்பு முறிவு, மகப்பேறியல்,குழந்தைகள் நலத்தில் சிக்கல், மூட்டு மாற்று அறுவை சிகிட்சை, எலும்பு முறிவு சிகிச்சை மற்றும் தசை அமுகல் பிரச்சனைகள் என அனைத்து பிரச்சினைகளுக்கும் தரமான சிகிச்சையினை அளிக்க முடிகின்றது.

இன்றைய நவீன காலத்தில் 40 வயத்திற்கு மேற்ப்பட்டோர் அனைவருக்கும் எதோ ஒரு உடற்கோளாறு இருக்கவே செய்கின்றது. அவற்றுள் அநேகமான கோளாறுகளை ஊசி மற்றும் வாய்மூல மருந்துகள் இன்றி இயன்முறை மருத்துவத்தினால் குணப்படுத்த முடிகின்றது. மேலும் இங்கு பௌதீக சக்திகள் (Heat, Cold, Kinetic, Potential & Electric Energy) மூலம் சிகிச்சையளிக்கப்படுவதால் 100 வீதம் பக்க விளைவுகள் அற்றது. இதன் காரணமாகவே மேலைத்தேய நாடுகளின் முதற்றர மருத்துவமுறையாக இயன்மருத்துவ முறை அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனலாம்.

**இயன் மருத்துவசிகிச்சை முறைகள் :**

- Electrotherapy
- Manual therapy
- Suspension therapy
- Phototherapy
- Cryotherapy
- Heat therapy
- Exercise therapy
- Wax therapy
- Tapping
- Hydrotherapy



**இயன்மருத்துவத்தின் மூலம் சிகிச்சையளிக்கப்படும் நோய்களுள் சில :**

- வலிகளுக்கான இயன் மருத்துவம்
- கழுத்து வலி (Neck pain)
- தோல் வலி (Shoulder pain)
- முதுகு வலி (Back pain)
- இடுப்பு வலி (Hip pain)
- குதிகால் வலி (Heel pain, Plantar facities, Achill tendinitis)
- தலைவலி (Headache)
- தாடை வலி (Tempero mandibular joint pain)
- கை கால் உடல் வலிகள் (Body & Limb pain)
- அனைத்து மூட்டு வலி இறுக்கம் (All joint pain & stiffness)

உடன் ஏற்படும் வலிகள் மற்றும் நாட்பட்ட வலிகள் அனைத்தும் குணமாகும். மேலும் உடம்பிலுள்ள அனைத்து வலிகளும் 100 வீதம் குணமாவதுடன் மீண்டும் ஏற்படாது.

**எலும்பு மூட்டு மற்றும் தசை பிரச்சனை தொடர்பான இயன்மருத்துவம் :**

- உடலின் தசைகள் தசைநார்கள் நரம்புகள் எலும்புகள் என்பவற்றில் ஏற்படும் காயங்கள்
- உடலின் தசைகள் தசைநார்கள் நரம்புகள் என்பவற்றில் ஏற்படும் பாதிப்புகள்(Carpal tunel syndrome, Tenosynovitis,Tenovaginitis, Tenis & Golfers elbow, Pirifomitis)
- தசை மூட்டு இறுக்கமடைதல் (Muscle & Joint Stiffness)
- ஆத்திரைட்டிஸ் (Arthritis)
- எலும்பு முறிவிற்கு பின்னரான புனர்தாபனம் (Fracture Rehabilitation)
- முதுகுந்தண்டு தொடர்பான பிரச்சனைகள் (Cervical Spodylosis, Ankylosis spondylosis, Spondylolesthesis, Disk prolapse & bulging, Cervical rib, Facet joint problem, Scoliosis)
- பாதம் மற்றும் முழங்கால் பிரச்சனைகள் (Flat foot, High arch foot, Genu valgum / varum)



# இன நல்லுறவில் மூதூரின் இலக்கியம்


பிரியங்கன் பாக்கியரெத்தினம்
செயலாளர்,
சம்பூர் தமிழ்க் கலா மன்றம்


மூதூர் திருகோணமலை மாவட்டத்தின் பன்மைத்துவ கலாசார பின்னனி கொண்ட ஒரு நிலத்தோற்றம். இங்கு தமிழ் ,முஸ்லிம் உறவென்பது நீண்ட கால பாரம்பரிய தொடர்ச்சியை உடையதாக விளங்கி வந்திருக்கிறது. எனினும் அண்மைக்கால சமூக முரண்பாடுகள் இனங்களுக்கிடையிலான சீரான உறவினை சீர்குலைத்திருக்கின்றது. ஆனாலும் அந்த சீர்குலைவையும் இன விரிசலையும் இல்லாது செய்யக்கூடிய ஓர் உறவுப்பாலமாக இன்று வரை இருக்கக்கூடியது இலக்கியங்களும் இலக்கியவாதிகளுமே என்பதனை அண்மையில் மூதூரில் நடைபெற்ற வைத்தியர் சதீஸினுடைய தென் திருமலை தேசம் நூல் வெளியீட்டு நிகழ்வில் உணர முடிந்தது.

கொட்டியாபுரப்பற்று என அடையாளப்படுத்தப்பட்ட நிலத்தில் ஆரம்பம் முதலே ஒன்றிற்குள் ஒன்றாக இருந்து வந்த தமிழ் ,முஸ்லிம் சமூகம் தங்களது பரஸ்பர தேவைகளை தங்களிடையே பகிர்ந்து கொண்டார்கள். நகரத்தேவைகளுக்கு மூதூர் முஸ்லிம்களை தமிழர்கள் நாடுவதும் பின் விவசாய மற்றும் கலை இலக்கிய தேவைகளுக்காக மூதூரின் கிழக்கு ,தெற்கு பக்கங்களில் வாழ்ந்த தமிழர்களை நாடுவதுமாக மிக அன்னியோன்னியமாக இருந்துவந்த சமூக கட்டமைப்பில் ஏற்பட்ட விரிசல் கசப்பானதே , அதனை மறுக்க முடியாது. ஒரு சாரரின் நடத்தைக்கோலம் பக்கம் சார்கின்ற தன்மை என்பவற்றில் ஏற்பட்ட விரக்தி இந்த விரிசலை இன்னும் அகலப்படுத்தியது.

இருந்த போதும் இன்றைய காலகட்டத்தில் மீண்டும் இந்த சமூகங்களின் ஒன்றிணைவு தேவையென உணரப்படுகின்றது. எனினும் அது இலக்கியவாதிகளாலும் இலக்கியங்களினாலுமே சாத்தியமாகும். அன்றி வேறு விதமான முயற்சிகள் எதுவும் சோபிப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகச்சொற்பமே . ஆகையினால்தான் எழுதும் எழுத்திலும் பேசும் மொழியிலும் ஒன்றுபட்ட தமிழ் முஸ்லிம் இலக்கியவாதிளினுடைய இணைவும் அமைப்புரீதியான உருவாக்கமாக “கொட்டியாரம் தமிழ்ச்சங்கத்தின்” உருவாக்கமும் காய்ந்துபோன தமிழ் , முஸ்லிம் உறவை துளிர்விடச்செய்யக் கூடிய ஒரு விடயமாக அமையும் என்பதே சாலப்பொருத்தம்.

சோழர்கால தமிழ்க்காவிய மரபு எவ்வாறு தமிழ் ,முஸ்லிம் பேதமின்றி சம்பூர் பத்திரகாளியம்மன் காவியம் , புகாரிக் காவியம் , வெருகல் கோவில் களவுக் காவியம் ,மழைக்காவியம் , பட்டோலைக் காவியம் , கங்கைக் காவியம் , குறிஞ்சா முனைக் காவியம் ,குட்டிக்காளி காவியம் என மூதூரில் தோன்றியது போல இன்னும் பல இலக்கிய முயற்சிகள் நடை பெற வேண்டும் .அதன் மூலமாக இரண்டு சமூக இலயக்கியபாரம்பரியமும் முன்பிருந்தது போல தொடருவது அரசியல் வேறுபாட்டால் பிளவுபட்ட சமூகங்களின் இன ஐக்கிய முயற்சியின் ஓர் ஆரம்ப புள்ளியாக அமையக்கூடும்.

தமிழ் முஸ்லிம்களால் பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்பட்டு வந்த கலாசார பண்பாடுகள் ( இவ்விடையம் பற்றி எம்.ஏ. சமாது அவர்கள் தனது “கொட்டியா புரப்பற்று வரலாறு எனும் நூலில் கூறியிருக்கின்றார் ) தற்காலத்தில் அருகி இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கப் படாமலையே அழிவுறும் நிலையிருக்கின்ற இன்றைய நாட்களில் அவற்றை மீள உயிர்ப்பிக்கூடிய வல்லமை என்னளவில் இலக்கிய வாதிகளிடம் மாத்திரமே தங்கியிருக்கிறது. ஆகவேதான் இந்த ஒன்றிணைவே இப்போது கோருகிறேன்.

கொட்டியாபுர வரலாற்றை பகீரத பிரயத்தனம் மேற்கொண்டு ஆவணப்படுத்தியவர்களான புலவர்.வே.அகிலேச பிள்ளை, கலாநிதி. வ.அ. இராசரெத்தினம், கலாநிதி சரவணபவன், திருமலை நவம், பாலசுகுமார், காசிநாதர், சிவபாலன் ,எம்.ஏ. சமாது, ஏ.எஸ்.உபைதுல்லா, கே.எம்.எம். இக்பால் , வைத்திய கலாநிதி ஸதீஸ்குமார் ஆகியோர் தந்த தேடலின் தரவுகளினடிப் படையில் முந்தய இலக்கியவாதிகளும் இலக்கிய உறவும் எந்த நிலையில் இருந்து வந்தது என்பதனை உணர முடியும்.

இலக்கிய முயற்சிகளை சந்தானம் அண்ணாவியுடன் மூதூரில் காசி முகமது ,கச்சி முகம்மது, முகைதீன் ,வெள்ளப் பொத்தார் ,நெய்னா முகமது ,வெள்ளைக் குட்டி , சுபைர் அண்ணாவி போன்றோரும் சம்பூரில் தம்பையா, பேச்சிமுத்து ,கணபதிப் பிள்ளை அண்ணாவி போன்றோரும் பிற்காலங்களில் அறியப்பட்ட செல்லையா ,முத்துக்குமார் ,சிவக்கொழுந்து ,அகிலேசப் பிள்ளை அண்ணாவி, மற்றும் ஈச்சிலம்பற்று ,இலங்கைத்துறை முகத்துவாரம் வெருகல் முகத்துவாரம் , மல்லிகைத்தீவு ,சேனையூர், கட்டைபறிச்சான் ,சாலையூர் பள்ளிக் குடியிருப்பு போன்ற பிரதேசத்து அண்ணாவிகளுமிணைந்து கூத்துக்கலைப் பாரம்பரியத்தை தமிழ் முஸ்லிம்களிடம் பேணி வளர்த்த தன்மை அவற்றின் மூலாமான உறவு என தொடர்ந்த நிலை இன்று கையறு நிலையாக இருக்கின்றமை என குறித்த இன விரிசல் நீண்டு செல்கிறது.

கொட்டியார இலக்கியவாதிகளாக முன்னைய நாட்களில் சிறந்து விளங்கிய புலவர் சாளையர் , உமறுலெப்பை , சவரிமுத்துப்பண்டிதர் , சீனித் தம்பிப்புலவர் ,நெய்னாகான் புலவர் , உமறு நெய்னாப்புலவர் ,கருத்தப்புலவர் , வெள்ளைப் புலவர் ,சவரிமுத்து பண்டிதர் ,நிக்கோலஸ் பண்டிதர், சம்பூர் கூத்தாடி வைரர், சுக்குரியர் பரிகாரி ,செல்லக்குட்டி அதிபர் மற்றும் சேனையூர் கட்டைபறிச்சானை சேர்ந்த பத்தினியன் பரிகாரி , மாரிமுத்துப்பண்டிதர் ,விஸ்வலிங்கம் , சங்கரப்பிள்ளை ,கனகசபை ,விஜயசிங்கம் ,மற்றும் மல்லிகைத்தீவு அருணாச்சலம் கணபதிப்பிள்ளை, தோப்பூரில் மீராலெப்பை குப்பைத்தம்பி புலவர், முகமது லெப்பை புலவர், குப்பைத்தம்பி அதனால் லெப்பை, குப்பைத்தம்பி முகமது லெப்பை மரைக்கார் , குப்பைத்தம்பி முகமது முகைதீன் போன்றோர் இணைந்து வளர்த்த தமிழிலக்கிய பாரம்பரியம் மீண்டும் துளிர்விட வேண்டும்.

அதற்காக கொட்டியாபுரப்பற்றில் இயங்கு நிலையில் இருக்ககூடிய சம்பூர் தமிழ்க் கலா மன்றம், ஸ்ரீமுருகன் இசைக்கழகம், விநாயகர் இசைக்கழகம், துர்க்கா இசைக்கழகம், மற்றும் கட்டைபறிச்சான் கலைவாணி இசைக்கழகம், சாரங்கா இசை நடனக கல்லூரி, சந்தோசபுரம் இசைவாணி இசைக்கழகம், கங்குவேலி அகத்தியர் கலைமாமன்றம், ஈச்சிலம்பற்று ஊற்று வலையுலக கலைஞர் மன்றம், பாரதிபுரம் டேவ்டான்ஸ் ஸ்ரூடியோ, மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் , மூதூர் இலக்கிய வட்டம், மூதூர் உமர் நெய்னார் புலவர் கழகம் போன்ற அமைப்புகள் ஒன்றிணைய வேண்டும்.


வ.அ. இராசரத்தினம் என்கின்ற இலக்கிய ஆளுமை தனது காலப்பகுதியில் மூதூரை மையப்படுத்தி மேற்கொண்ட கலை இலக்கிய மென்னெடுப்புகள் முத்தமிழ் விழாக்கள் என வளர்த்தெடுத்த இந்த இலக்கிய பாரம்பரியம் மீண்டும் அதே வீச்சுடன் தமிழ் முஸ்லிம் இலக்கிய கர்த்தாக்களின் ஒன்றிணைவோடு புதிய கட்டமைப்பாக உருவாக்கம் பெற வேண்டும். அதுவே இருள் வாழ்ந்த போன தமிழ் முஸ்லிம் உறவில் ஒளிபாய்ச்சுவதாக அமையும் அதற்காகவேனும் கொட்டியாரம் தமிழ் மன்றத்தின் உருவாக்கத்திற்கென அனைவரும் ஒன்றுபட்டு முன்வரவேண்டும்.

# நீரிழிவு நோய்

## ஏன் உடல் அங்கங்களை அகற்ற வேண்டும்

**நீரிழிவு நோய் என்றால் என்ன?**

குருதி குளுக்கோஸ் மட்டம் 80-120 வரை நியம மட்டமாக கருதப்படுகின்றது. நியமட்டத்தை பேணுவதில் உடலில் குருதி குளுக்கோஸ் சீராக்கும் தொழிற்பாட்டு ஒழுங்கமைக்கப்படும். இதனை உடலியல் ஓமோன்களான இன்சுலின், குளுக்காகோன் மேற்கொள்கின்றது.





Niyas Aasha Falin
Reading in B.Sc
SEUSL


இன்சுலின் (Insulin) ஓமோன் குருதியில் உயர் குளுக்கோஸ் மட்டத்தை குறைப்பதிலும் குளுக்காகோன் (Glucagon) தாழ் குருதி குளுக்கோஸ் மட்டத்தை உயர்த்துவத்திலும் பங்காற்றும்.

நீரிழிவு என்பது குறித்த இரு ஓமோன்களும் முறையான தொழிற்பாட்டை காட்டமுடியாத நிலையினையே குறிக்கும்.
நீரிழிவு இருவகையில் வேறு பிரிக்கலாம்.

- உயர் நீரிழிவு,
- தாழ் நீரிழிவு.

பெரும்பாலான நபர்களிற்கு உயர் குருதி நீரிழிவு ஏற்படுகின்றது. இது வயது, பால், சூழல், பரம்பரை, உடல் ஆரோக்கியம், உணவுப் பழக்கவழக்கம் மருந்து பாவனைகள் மற்றும் சில நோய்த் தொற்று என்பவற்றில் தங்கி இருக்கும்.

**நீரிழிவு நோயின் பாதிப்பு :**

உடலில் குருதி குளுக்கோஸ் மட்டம் சீராக்கம் முறையற்றதாக காணப்படின் சிறுநீர் ஊடாக குளுகோஸ் வெளியேற்றம் நடைபெறும். அத்தோடு சிறுநீரகம் தனது தொழிற்பாட்டில் அதிகளவு வேலையை செய்வதனால் சிறுநீரகம் செயலிழக்க காரணமாகலாம். உயர் குருதி குளுகோஸ் காரணமாக இதய நோய்கள், கண்பார்வை இழப்பு, சோர்வு, அதிக தூக்கம், காயம் குணமாகாமை, நரம்புத்தளர்ச்சி, மயக்கம் மற்றும் வலிப்பு போன்ற நோய்களும் ஏற்படலாம்.

**காயம் குணமடையாமை :**

குருதியில் உயர் செறிவில் குளுகோஸ் காணப்படுவதனால் காயம் ஏற்பட்டால் காயத்தில் தோற்று தலடையும் நுண்ணங்கி தொடர்ந் தும் உயிர்புற்று தொழிற்பட்டுக் கொண்டேயிருக்கும். இதனால் நுண் ணங்கியை அழிக்க முடியாத நிலை உண்டாகும்.

குறிப்பாக கால்களில் நீரிழிவு நோய் காரணமாக குருதி அழுத்தம் உண்டாகும். இதனால் இயல்பாக தோல் வெடுப்பு, சொறி, தோல் சார்ந்த புண்கள் உண்டாக காரணமாக அமையும்.

**விரல் அகற்ற காரணம் :**

கால் விரல்களில் குருதி அழுத்தல் காரணமாக விரல் நரம்புகள் பாதிப்புற்று விரல் தோல் மற்றும் தசை பகுதி இறக்கும். இதனால் விரல்களை குறித்த பாதிப்புற்ற பகுதியில் பங்கசு தோற்று அதிகமாகும். வளர்ச்சியடையும் பங்கசுக்கள் என்பு மச்சையை தாக்க ஆரம்பிக்கும். இதனால் பாரியளவில் உடல் பாதிப்பு ஏற்படும். இதனை தடுக்கும் முகமாகவே பாதிப்புற்ற விரல்களை தோற்று தலையட முன்னர் சிகிச்சை முன்றையில் வெட்டி நீக்கம் செய்யப்படுகின்றது.

**மேலதிக தகவல்**

நீரிழிவு நோய்க்கு சிகிச்சை முறையாக இன்சுலின் ஊசிகள் வழங்கப் படுகின்றது. அத்தோடு உணவுக் கட்டுப்பாடு, ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கம், போதைப்பொருள், மதுபான பாவனை குறைப்பு, ஓய்வு, போதிய தூக்கம், உடற்பயிற்சி, உயரத்திற்கு ஏற்ற உடல் நிறை மற்றும் செயற்கை உணவுகளைப் போதியளவு குறைத்தல் போன்றன தீர்வாக அமையும்.

---

REGIONAL DIRECTOR OF HEALTH SERVICES TRINCOMALEE

COVID 19
TRINCOMALEE DISTRICT SUMMARY

REGIONAL EPIDEMIOLOGY UNIT - TRINCOMALEE

19.05.2021 10AM - 20.05.2021 10AM
POSITIVE / DEATH CASES

| | Positive |
|---|---|
| MOH Kantale | 15 |
| MOH Padavisiripura | 10 |
| MOH Gomarangadawela | 9 |
| MOH Muthur | 9 |
| MOH Seruwila | 7 |
| MOH Uppuveli | 5 |
| MOH Kurinchakerny | 3 |
| MOH Kinniya | 3 |
| MOH Thampalakamam | - |
| MOH Kuchchaveli | - |
| MOH Trincomalee | - |
| MOH Eachchilampattu | - |
| Total : 19.05.2021 10AM - 20.05.2021 10AM | 61 |
| Total Positive for MAY | 914 |
| Total Positive for District | 2355 |

YEARLY / MONTHLY POSITIVE CASES

| | | |
|---|---|---|
| 2020 | Total up to December | 118 |
| 2021 | January | 335 |
| | February | 107 |
| | March | 188 |
| | April | 693 |
| | May | 914 |
| Total Positive for District | | 2355 |

திருகோணமலை மாவட்ட COVID 19 பகுப்பாய்வு

| 19.05.2021 10AM - 20.05.2021 10AM | | Cum. |
|---|---|---|
| No. of PCR taken | 104 | 13305 |
| No. of RAT taken | 407 | 19014 |

| Death: 19.05.2021 10AM - 20.05.2021 10AM | | Cum. |
|---|---|---|
| MOH Trincomalee | 1 | 13 |
| MOH Kinniya | - | 10 |
| MOH Uppuveli | - | 9 |
| MOH Kurinchakerny | 3 | 7 |
| MOH Muthur | 1 | 5 |
| MOH Kantale | - | 3 |
| MOH Kuchchaveli | - | 1 |
| MOH Padavisiripura | - | - |
| MOH Seruwila | - | - |
| MOH Thampalakamam | - | - |
| MOH Eachchilampattu | - | - |
| MOH Gomarangadawela | - | - |
| | 5 | 48 |

# மூதூர் பிரதேச சபையின் நுகர்வு இல்லாமல் போகும்
# மூதூர் பொதுப் பேரூந்து தரிப்பிடம்



கியாத்து முஹமது, இரத்தின சிங்கம், ஜன்னத்துமா மற்றும் பலரின் நன்கொடையுன் மூதூர் பிரதேச சபையின் உடமையாக்கப்பட்ட சதுப்புநிலப்பரப்பே தற்போதுள்ள மூதூர் பிரதேச சபைக்கு சொந்தமான பொது பேரூந்து தரிப்பிடம். 2.5 ஏக்கர் பரப்பளவு கொண்டு இக்காணி மூதூர் மத்தி கிராம சேவகர் பிரிவு எல்லைக்குள் உள்ளடக்கப்படும் ஒரு பொருளாதார ஈட்டல் மையமாக கருதக்கூடிய முக்கிய தளமாகும்.

மூதூர் நகரின் மத்தியில் போக்குவரத்திற்கு பொருத்தமான அமைவிடமாகவும், போதுமான சூழல் வசதிகளை கொண்ட குறித்த பேரூந்து பொதுத் தரிப்பிட நிலையமும் அதனைச் சூழவுள்ள கடைத்தொகுதிகளும் எந்த அளவிற்கு மூதூர் பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டும் துறையாக காணப்படுகின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

**•MUTUR JMI•**



2014 ஆம் ஆண்டு முன்னாள் பிரதேச சபை தவிசாளரும் தற்போதிய உறுப்பினருமான கௌரவ அகமட் முஹைதீன் ஹரீஸ் அவர்களின் காலத்தில் கொண்டுவரப்பட்ட மூதூருக்கான நிலைபேறான ஒரு அபிவிருத்தி திட்டமே பேஷரூந்து தரிப்பிடத்தை சூழ்ந்ததான விற்பனை நிலைய கடைத்தொகுதிகள். 25 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட 100 கடைத் தொகுதிகளில் 40 வியாபார நிலையங்கள் முழுமைப்படுத்தப்பட்ட நிலையிலும் ஏனையவை திறந்த நிலையிலும் காணப்படுகிறது. மேற்படி திட்டத்தினூடாக அக்காலத்தில் மூதூர் பிரதான வீதி, மின்சார வீதி மருங்கிலும் கடைகள் அற்று அங்காடி கடைகளாக (பேமென்ட் சொப்) வியாபாரம் செய்த வியாபாரிகளுக்கான விற்பனை நிலையம் வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இத்திட்டம் இன்று பாராமுகமான நிலையில் காணப்படுவது கவலையளிக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் எங்கும் காணப்படாத உட்கட்டமைப்பு வசதிகொண்ட மூதூர் பொதுப் பேஷரூந்து தரிப்பிட நிலையமும் அதனை சூழவுள்ள கடைத்தொகுதிகளும் அண்ணளவாக மாதம் ஒன்றுக்கு 40,000.00 ரூபா வருமானம் ஈட்டவேண்டிய நிலையில் காணப்பட்டபோதிலும் 2013 தொடக்கம் இன்றுவரை பராமரிப்புச் செலவீனமாக சராசரியாக 21 லட்சம் செலவீனம் காட்டுவதாக பிரதேச சபை அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

மூதூர் பொதுச்சந்தை வாரத்தில் ஞாயிறு தினத்தில் மாத்திரம் குறித்த பகுதியில் அங்காடிச்சந்தை நடாத்தப்பட்டு வரும் நிலையில் ஏன் பிரதேச சபையினால் எல்லா நாட்களுக்கும் இவ்வாறான ஒரு ஒழுக்கை மேற்கொள்ளமுடியாதுள்ளது என்பதுவே இங்கு எழுந்துள்ள வினாவாகும்??

**இதனை ஒழுங்குபடுத்த பின்வரும் சாத்தியமான நடைமுறைகளை ஒழுங்குபடுத்த முடியும்.**

- மூதூரூடாக செல்லும் அனைத்து பேரூந்துகளும் குறித்த காலம் பொது பேரூந்து தரிப்பிடத்தில் தரித்து செல்வதற்கான ஒழுக்குகளை மேற்கொள்தல்
- மக்களுக்கு அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்யும் விற்பனை நிலையங்களுக்கும், இரவு நேர கடைகள், உணவகங்கள், விற்பனை நிலையங்கலுக்கும் குறித்த பகுதியில் காணப்படும் கடைத்தொகுதியை குத்தகைக்கு விடுதல்.
- பொது சந்தையில் காணப்படும் நெரிசலான அமைப்பை மீள் ஒழுங்குபடுத்தி நவீன மயப்படுத்துவதோடு மேலதிகமாக காணப்படும் விற்பனை நிலையங்களை இங்கு இடமாற்றம் செய்தல்.
- வீதியோரங்களில் அங்காடி கடைகளாக விற்பனை செய்யும் வியாபாரிகளை தடைசெய்து அவர்களுக்கு குறித்த பகுதியில் காணப்படும் மேலதிக கடைகளை வழங்குதல்
- திறந்த கடைகளாக காணப்படும் பகுதிகளை மூடிய கடைத் தொகுதிகளாக மாற்றுதல்
- தங்குமிட வசதிகள், குடிநீர் வசதிகள், வாகன தரிப்பிடம், பொதுக்கழிப்பறை, வணக்க அறை, தற்காலிக ஓய்வறை போன்றவற்றை மேலதிகமாக காணப்படும் பகுதிகளில் அமைத்தல்.
- மிகக்குறைந்த மாதாந்த சந்தாவில் மேலதிகமாகக் காணப்படும் பகுதிகளை விற்பனையாளர்களுக்கு வழங்குதல்.
- பேரூந்து தரிப்பிடத்திற்காக மாதாந்த சந்தாவை அறவிடுதல்.
- தனியார் வகுப்புகள், தனியார் காரியாலயம் போன்றவற்றுக்கு நவீன மயப்படுத்தப்பட்ட கட்டிடங்களை உருவாக்குதல்.

தற்போது குறித்த பகுதிக்கு மக்களை கொண்டுவருவதற்கான வேலைத்திட்டமாக பேரூந்து வருகை மற்றும் தரிப்பிடத்தை உறுதி செய்வதோடு வீதியில் விற்பனை செய்யும் அங்காடி கடை வியாபாரிகளின் விற்பனையை தடைசெய்து இடமாற்றம் முடியும். இந்நடைமுறையை மூதூர் பிரதேச சபை தவிசாளர், மூதூர் வர்த்தக சங்கம் போன்றன ஒருங்கிணைந்து மேற்கொள்ளவேண்டுமென சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# மூதூர் வலய க.பொ.த உயர்தர பெறுபேற்று பகுப்பாய்வு



**ACM. Asmy**
Asst. Editor
Muththithal






இம்முறை வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் பல முன்னணி பாடசாலைகளில் இருந்து போதுமான அடைவுகள் பெறப்படவில்லை என்று விசனம் எழுந்துள்ளது. குறிப்பாக இம்முறை பொறியியல்துறை திருப்திகரமாக வெளிக்காட்டப்பட்ட போதிலும் உயிரியல் விஞ்ஞான துறைக்கான அடைவுகள் மற்றும் இம்முறை மூதூர் நகர்ப்புற பிரதேசத்தில் மருத்துவ துறைக்கு புதிய பாடத்திட்ட எந்தவொரு மாணவரும் தேர்வு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இந்நாட்களில் பாரிய பின்னடைவை எதிர்நோக்குவதாக அவதானிக்க முடிகின்றது.

இம்முறை மூதூர் வலயத்தில் 19 உயர்தர பாடசாலைகளில் இருந்து 478 மாணவர்கள் பல்கலைக்கழக நுளைவு தகுதியை பெற்றுள்ளனர். இதில் கலைபிரிவில் 393, பௌதீகவியல் தொழிநுட்பம் 25, உயிரியல் தொழிநுட்பம் 24, பௌதீக விஞ்ஞானம் 13, உயிரியல் விஞ்ஞானம் 13, வர்த்தகம் 10 நுழைவு கிடைத்துள்ளது.

சதவீத அடிப்படையில் 2019 ஆண்டிலும் பார்க்க 2020 ஆம் ஆண்டு பெறுபேறு உயிரியல் தொழிநுட்பப் பாடத்தை தவிர்ந்த ஏனைய துறைகள் அனைத்தும் அதீத முன்னேற்றம் கண்டுள்ளபோதும் என்ணிக்கை அடிப்படையிலான வீழ்ச்சியாகவே கருதவேண்டியுள்ளது.

அத்தோடு வலயத்தில் 3A சித்தி பெற்ற 20 மாணவர்களும் இதில் மாவட்ட நிலையில் முதல் நிலை பெற்ற மாணவர்களாக கலைப்பிரிவு மற்றும் உயிரியல் தொழிநுட்ப மாணவர்கள் இருவர் சாதனை நிலை நாட்டியுள்ளனர். குறிப்பாக மூதூர் அந்நஹார் மகா வித்தியாலயம் மற்றும் பட்டித்திடல் பாடசாலை மாணவர்கள் சித்தியடைதல் தரப்படுத்தலில் 100% அடைவை பெற்றுள்ளது. பல்கலைக்கழக தேர்வு சதவீத அடிப்படையில் தோப்பூர் பாத்திமா மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றுக் கொண்டுள்ளது. இதில் குறிப்பாக 6 மாணவிகள் 3A சித்தி அடைந்துள்ளமை பாராட்டுக்குரியது. இம்முறை பொறியியல் துறைக்கு அல்ஹிலால் மத்திய கல்லூரியில் இருந்து இருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். பழைய பாடத்திட்டத்தில் 4 மாணவர்கள் மருத்துவ பீடம் நுழைவதற்கான சந்தர்ப்பம் உண்டென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவட்ட நிலையில் ஒப்பிடும்போது பழைய பாடத் திட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கணிசமானோர் முன்னணி அடைவுகளை பெற்றுக் கொண்டுள்ளார்கள். இருந்தபோதும் பல்கலைக் கழக தேர்வு வெட்டுப்புள்ளியே இவர்களின் உள்ளீர்ப்பில் தாக்கம் செலுத்தும்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 64.39 சதவீதமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியுடையவர்களாக இருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, இம்முறை 194,297 மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க முடியுமெனவும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **3 பாடங்களுக்கும் தோற்றிய மாணவர்கள்**

  *புதிய பாடத்திட்டம் - 277,625*

  *பழைய பாடத்திட்டம் - 24,146*

- **பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர்**

  *புதிய பாடத்திட்டம் - 178,337*

  *பழைய பாடத்திட்டம் - 15,960*

  *மொத்தம் - 194,297*

- **இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள பெறுபேறுகள்**

  *புதிய பாடத்திட்டம் - 72*

  *பழைய பாடத்திட்டம் - 14*

மூதூர் வலயத்தில் கல்வி முன்னேற்றத்தில் பங்கற்றும் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சீனத் முன்னவ்வரா, உதவி கல்வி பணிப்பாளர் முகமட் அப்பாஸ், திட்டமிடல் பணிப்பாளர் சியாத் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் இவ்விடத்தில் மூதூர் சார்பிலான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**Result Analysis- 2019 & 2020 A/L (first Time only-New syllabus**

| Name of the Zone | Stream | No of Sat | No of Qualified to apply for admission to university | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| Mutur | Arts | 475 | 393 | 73.32 | 82.74 |
| | Bio Science | 26 | 13 | 62 | 50.00 |
| | Bio Technology | 32 | 24 | 51 | 75.00 |
| | Commerce | 12 | 10 | 77 | 83.33 |
| | Engnieer Technology | 38 | 25 | 32 | 65.79 |
| | Physical Science | 17 | 13 | 50 | 76.47 |

**Zonal Education Office - Mutur**
**G.C.E A/L - 2020**
**Qualified Pass Percentage**

| S.No | Schools | Not Qualified | Qualified | Total | Pass Percentage |
|---|---|---|---|---|---|
| 1 | T /ANNAHAR GIRLS MAHA VIDYALAYA, MUTUR. | | 24 | 24 | 100.00 |
| 2 | T /PADDITHIDAL G.T.M. SCHOOL, PADDITHIDAL, THOPPUR. | | 8 | 8 | 100.00 |
| 3 | T /MU/FATHIMA MUSLIM LADIES COLLEGE, THOPPUR. | 1 | 32 | 33 | 96.97 |
| 4 | T /AL- HITHAYA MAHA VIDYALAYA, MAIN STREET, MUTUR. | 1 | 17 | 18 | 94.44 |
| 5 | T /CHENAIYOOR CENTRAL COLLEGE, KADDAIPARICHAN, MUTUR. | 2 | 28 | 30 | 93.33 |
| 6 | T /AL MINA VIDYALAYA, PERIYAPALAM, MUTHUR. | 1 | 13 | 14 | 92.86 |
| 7 | T /MUTHUR MUSLIM LADIES COLLEGE, NEW JETTY ROAD, MUTHUR. | 3 | 39 | 42 | 92.86 |
| 8 | T /ST. ANTHONY'S MAHA VIDYALAYA, MUTUR. | 1 | 11 | 12 | 91.67 |
| 9 | T /VERUKALAMPATHY HINDU MAHA VIDYALAYA, MAWADICHCHENAI, MUTU | 1 | 10 | 11 | 90.91 |
| 10 | T /KILIVEDDY MAHA VIDYALAYA, KILIVEDDY. | 3 | 24 | 27 | 88.89 |
| 11 | T /AL HILAL MAHA VIDYALAYA, MUTUR. | 6 | 44 | 50 | 88.00 |
| 12 | T /AL THAHJ MAHA VIDYALAYA, JINNA NAGAR, THOPPUR. | 1 | 7 | 8 | 87.50 |
| 13 | T /SAMPUR MAHA VIDYALAYA, SAMPUR, MUTUR. | 5 | 35 | 40 | 87.50 |
| 14 | T /MALLIHAITIVU MAHA VIDYALAYA, KILIVEDDY, MUTUR. | 1 | 6 | 7 | 85.71 |
| 15 | T/Mu/ETMHC | 10 | 59 | 69 | 85.51 |
| 16 | T /KALAIMAGAL HINDU COLLEGE, PALLIKKUDIYIRUPPU. | 4 | 21 | 25 | 84.00 |
| 17 | T /SRI SHANPAHA MAHA VIDYALAYA, EACHCHALAMPATTAI. | 4 | 13 | 17 | 76.47 |
| 18 | T /MUTUR MADHYA MAHA VIDYALAYA, MUTUR. | 25 | 76 | 101 | 75.25 |
| 19 | T /AL-HAMBRA CENTRAL COLLEGE, THOPPUR. | 8 | 11 | 19 | 57.89 |
| | Zone | 77 | 478 | 555 | 86.13 |

## புதிய அதிபர் கடமையேற்பு மூதூர் மத்திய கல்லூரி



தி/மூதூர் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) புதிய அதிபராக இன்று திங்கட்கிழமை (2021.06.14) Mr. A. Muheer (SLPS-1) பதவிப்பிரமாணம் செய்து தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவரது பணிகள் எதிர்காலங்களில் சிறக்க பாடசாலை சமூகம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்றன ஒத்துழைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## மூதூர் தள வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



மூதூர் தள வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களை இன்று (09. 06. 2021) பகல் 12 மணியளவில் மூதூர் தள வைத்தியசாலை அத்தியட்சகர் Dr. கயல்விழி அவர்களிடம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் அவர்களினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் கௌரவ அரூஸ், மூதூர் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஒக்சிஜன் ரெகுலேட்டர் வழங்கிவைப்பு

மூதூர் தள வைத்தியசாலை பயன்படுத்த முடியாததாக இருந்தது நோயாளிகளுக்கு ஒக்ஸிஜன் வழங்க பயன்படும் 14 அத்தியாவசிய மருத்துவ ஒக்ஸிஜன் ரெகுலேட்டர்களில் 12 யினை இலங்கை பொதுஜன பொறியியல் முன்னணியின் திருகோணமலை பிரிவினால் இன்று 576000 பெறுமதியான பொருட்கள் பழுதுபார்த்து மருத்துவ மனைக்கு ஒப்படைக்கப்பட்டன. இவற்றை ஆளுனரின் ஒருங்கிணைப்பு செயலாளர் பொறியியலாளர் மகேஷ் சதுரங்க கையளித்தார்.



## ஜபல்நகர் பிரதேச குடும்பங்களுக்கு உலருணவு பொதி விநியோகம்

பெயர் குறிப்பிட முடியாத தனவந்தர் ஒருவரின் உதவியில் தோப்பூரைச் சேர்ந்த சகோதரர் Faheem மற்றும் சகோதரர் Haja Mohamed (Lowyer) மற்றும் Faizer ஆசிரியரின் ஏற்பாட்டில் 2000 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொதிகள் மூதூரில் 65 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன அல்ஹம்துலில்லாஹ்.


இந்த அபாயகரமான காலப்பகுதியிலும் எமக்காக இந்த உதவிகளை செய்து தந்த தோப்பூர் வாழ் சகோதரர்களுக்கு நன்றி கூறியவனாய்.



## சுகாதார ஊழியர்கள் பணிபகிஷ்கரிப்பு மூதூர் தள வைத்தியசாலை

மூதூர் தள வைத்தியசாலையில் கடமையாற்று சுகாதார ஊழியர்கள் 15 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இன்று (03) வைத்தியசாலைக்கு முன்பாக பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் சுகாதார போராட்டத்தில் தங்களின் பங்குபற்றுதலை உறுதி செய்தனர்.

சுகாதார துறையைச் சேர்ந்த 6 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் நடைபெறும் இப்போராட்டத்தில் மூதூர் தள வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள் இன்று (03) காலை தமது கடமைகளில் இருந்து வெளியேறி 15 அம்ச கோரிக்கையினை முன்வைத்து வைத்தியசாலை நுழைவாயிலுக்கு முன்னால் சுகாதார நடைமுறைகளுடன் ஒன்று கூடி தமது எதிர்ப்பை தெரிவித்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.




## அனர்த்த நிதியங்களுக்காக நன்கொடை மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியம்

PDF நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு சகோதரர்களின் நிதிப் பங்களிப்போடு மூதூர், கிண்ணியா, தோப்பூர் ஆகிய பிரதேசங்களில் உருவாக்கப்பட்டுள்ள அனர்த்த நிதியங்களுக்கு நன்கொடை வழங்கி வைக்கப்பட்டன.





# மூதூர் அனர்த்த உதவி

# Muthur Disaster Aid-MDA



**வழங்குபவர் :** அல்ஹாஜ் எம்.சி.எம் ஷெரீப்(f)

மூதூர் அனர்த்த உதவி **(Muthur Disaster Aid-MDA)** பற்றி விளக்குகின்றார் : அதன் தலைவர் அல்ஹாஜ் எம்.சி.எம் ஷெரீப்(f)

**தற்போது மூதூரில் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் MDA அமைப்பின் தோற்றம் பற்றி கூறுவீர்களா?**

கடந்த மே மாதம் 28ஆந் திகதி மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம் முபாரக் அவர்களின் தலைமையில் மூதூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கொவிட்-19 சம்பந்தமான ஒரு கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு மூதூரில் உள்ள முக்கிய பல சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப் பட்டிருந்தனர்.



இக்கூட்டத்தில் கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்டி ருக்கும் தனிநபர்களுக்கும் மற்றும் குடும்பங்களுக்கும், பயணத்தடை மற்றும் முடகத்தினால் தொழிலின்றி பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பத்தினருக்கும் எவ்வாறு உதவலாம் என்ற விடயங்கள் பற்றி பிரதேச செயலாளர் கூட்டத்தில் கலந்துகொண்ட சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் தெளிவாக கலந்துரையாடினார். அத்துடன் இது பற்றி ஒவ்வொரு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டார். இறுதியில் ஒவ்வொரு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் உள்ள டக்கியதாக 15 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

**இக்குழுவில் அங்கம் வகிக்கும் மூதூரின் முன்னணி சமூக அமைப்புகள் யாவை?**

மூதூர் பள்ளிவாயல்கள் சம்மேளனம், ஜம்மியத்துல் உலமா சபை, மூதூர் மஜ்லிஸுஷ் ஸுரா, மூதூர் வர்த்தகர் சங்கம், மூதூர் சட்டத்தரணிகள் சங்கம், சமூக அபிவிருத்திக் கான இணைப்பு நிலையம் (3CD), மக்கள் அபிவிருத்தி ஒன்றியம் (PDF), நாங்கள் உங்களுக்காக (WE4U), அதிபர்கள் சங்கம், பைத்துல்மால், தென்கிழக்கு பல்கலைக் கழக பட்டதாரிகள் சங்கம் (SEUGA), இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பல முன்னணி நிறுவனங்கள் இக்குழுவில் அங்கம் பெறுகின்றன.

இக்குழு தெரிவு செய்யப்பட்டபோது அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஓய்வு பெற்ற SLAS அதிகாரியான என்னை இக்குழுவின் தலைவராக தெரிவு செய்திருந்தனர்.

இக்குழு தெரிவுசெய்யப்பட்ட அன்றைய தினமே பிற்பகல் மூதூர் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் ஒன்று கூடி "மூதூர் அனர்த்த உதவி - MUTUR DISASTER AID – MDA" எனும் பெயரில் நிர்வாக சபை ஒன்றை அமைத்துக் கொண்டதோடு நிதிக்குழு, நிவாரணக் குழு, பிரதேச மட்டக்குழு, ஜனாஸா நலன்புரிக் குழு, கொவிட் தொற்று தடுப்புக்குழு, ஊடகக் குழு என பல்வேறு குழுக்களை அமைத்துக் கொண்டது.

மேலும் இக்குழு மூதூர் ஜனாசா நலம்புரிச் சங்கம், மூதூர் வேன் உரிமை யாளர்கள் சங்கம், மூதூர் மத்திய சபையின் தலைவர் திரு.என். சுபாகரன் (DO), உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.கே.ஜி.ஆர். ஜஹத் குமார (லால்) ஆகியோரையும் தன்னோடு இணைத்துக்கொண்டு மூன்று சமூகங் களையும் உள்ளடக்கியதாக சிறப்புடன் செயற்பட்டு வருகிறது.

**இவ் அமைப்பின் தற்போதைய செயற்பாடுகள் பற்றி கூறுவீர்களா?**

இக்குழுவானது கொவிற்றினால் மரணம் அடைபவர்களுக்கு தேவையான அடக்கத்துக்குரிய பெட்டிகளை இலவசமாக வழங்குதல், ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களுக்கு பிரேதங்களை கொண்டு செல்வதற்குத் தேவை ஏற்படும் பட்சத்தில் வாகன ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், கொவிற் தொற்று காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக உலர் உணவுப் பொதிகளை அவர்களின் வீடுகளுக்கு நேரடியாக கொண்டு சென்று வழங்குதல் மற்றும் பயணத் தடை காரணமாக வருமானமின்றி பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங் களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குதல் போன்ற பணிகளை இலக்காகக் கொண்டு சிறப்புடன் செயற்பட்டு வருகின்றது.

**MDA அமைப்புக்கு கிடைக்கப் பெற்றுள்ள பொருளுதவி மற்றும் நிதியுதவி பற்றி கூறுவீர்களா?**

இவ் அமைப்புக்கு ஒரு மாத காலப்பகுதிக்குள் பல்வேறு உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன அவை பொருட்களாகவும் கிடைக்கப் பெற்றுள்ளன பணமாகவும் கிடைக்கப்பெற்றுள்ளன. பல நலன் விரும்பிகள் பிரேத/ஜனாசாப் பெட்டிகளை வழங்கியுள்ளனர். இன்னும் பலர் பிரேத/ஜனாசாப் பெட்டிகளை வழங்குவதற்கு தயார் நிலையில் உள்ளனர். கொழும்பில் உள்ள JDM டெக்ஸ்டைல்ஸ் வியாபார நிறுவனம், அழ்கப்பிமாழா அரச சார்பற்ற நிறுவனம், உள்ளூரில் உள்ள சில அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தக பிரமுகர்கள் உலர் உணவுகளை வழங்கி உள்ளனர்.

நமதூரைச் சேர்ந்த வர்த்தக பிரமுகர்கள், ஒப்பந்தகாரர்கள், உயர்பதவி வகிப்பவர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் என இன்னும் பலர் நிதி உதவிகளை வழங்கியுள்ளனர்/வழங்கிக் கொண்டும் இருக்கின்றனர்.



இதனை விட வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல சகோதரர்களும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர். அத்துடன் இவ் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் சமூக நிறுவனங்களும் நிதிப் பங்களிப்பினை வழங்கியுள்ளன. மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ எம்.எஸ். தௌபீக், கௌரவ இம்றான் மஹ்ரூப் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கே.எம். தௌபீக் (திடீர்) போன்ற அரசியல் பிரமுகர்களும் நிதி உதவிகளை வழங்கியுள்ளனர்.

மேலும் கிண்ணியாவைச் சேர்ந்த சில சகோதரர்களும் நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கியுள்ளனர். அத்துடன் முன்னாள் கிண்ணியா நகர முதல்வர் டாக்டர் ஹில்மி மஹ்ரூப் அவர்களும் நிதி உதவியை வழங்கியுள்ளார்.

இதற்கு மேலதிகமாக நாம் எமது அமைப்பினால் மூதூரில் உள்ள அனைத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறும் ஓய்வுநிலை அரச உத்தியோகத்தர்களிடம் நிதியுதவிகளை பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் மூதூரில் உள்ள பள்ளிவாசல்கள் ஊடாக நிதி உதவிகளை கோரியிருந்தோம் அவர்கள் அனைவரும் மனமுவந்து எமது அமைப்புக்கு நிதி உதவிகளை வழங்கி கொண்டிருக்கின்றார்கள்.




**பொது மக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன?**

இதுவரை எமது MDA அமைப்புக்கு கிடைக்கப் பெற்றுள்ள பொருளுதவி மற்றும் நிதி உதவிகளைக்கொண்டு ரூபா 62 இலட்சம் பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை மூவாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பள்ளிவாயல்கள் ஊடாக வழங்கியுள்ளோம். அத்துடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சுமார் 80 குடும்பங்களுக்கு இதுவரை உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளோம்.

மேலும் நாம் ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அடுத்த வாரமளவில் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். அத்துடன் கொவிற் தொற்றினால் மேலும் ஏதாவது குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டால் அக்குடும்பங்களுக்கும் உலர் உணவுப்பொதிகளை வழங்குவதற்குத் தயார் நிலையில் உள்ளோம்.

இச்சந்தர்ப்பத்தில் இதுவரை மூதூர் அனர்த்த உதவி MDA அமைப்புக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் மூதூர் மக்கள் சார்பாக எமது MDA அமைப்பின் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம.

**எதிர்காலத்தில் அமுல்படுத்தக் கூடிய ஏதாவது திட்டங்கள் பற்றி கூறுவீர்களா?**

எதிர்காலத்தில் மூதூருக்கென ஒரு நிரந்தரமான பொது நிதியம் ஒன்றை உருவாக்குவதே அனேக பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையும் என்பது எனது கருத்தாகும்.

இதற்கு முன்பும் நாம் அநேகமான அனர்த்தங்களை சந்தித்திருக்கிறோம். பெரு வெள்ளம், சூறாவளி, மினி சூறாவளி, வன்செயல், யுத்தம், சுனாமி, வெள்ளம், இடப்பெயர்வு என பல அனர்த்தங்களைச் சந்தித்த நாம் தற்போது கொவிட்-19 என்னும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளோம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலெல்லாம் நாம் எதிர் பார்த்து நின்றது அரசையும், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கொடை வள்ளல்கள், நலன் விரும்பிகளின் உதவிகளையேயாகும். இவர்களும் நமக்கு வெகுவாக உதவியுள்ளார்கள். தற்போது ஏற்பட்டுள்ள கொவிட்-19 அனர்த்தமானது நமது ஊரை மட்டுமல்ல, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சகலரையும் பாதிப்படையச் செய்துள்ள ஓர் அனர்த்தமாகும்.

**எதிர்காலத்திலும் மேலே சொன்னவாறு பல அனர்த்தங்கள் ஏற்பட்டு நாம் பாதிக்கப்படலாம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் நமக்கென ஒரு நிதியத்தை ஏற்படுத்தி வைத்திருந்தால் நாம் நமது காலில் நின்று நம்மையே நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும் அல்லவா?**

மூதூர் நகர பிரிவில் உள்ள 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் 10,600க்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. ஒவ்வொரு குடும்பமும் தங்கள் தங்கள் வருமானத்துக்கு ஏற்ப ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை அவ்வாறு உருவாக்கப்படும் பொது நிதியத்திற்கு செலுத்தலாம். (பள்ளிவா சல்களுக்கு மாதாந்தம் செலுத்துவது போல).

அது 100/- 200/- 300/- 400/- 500/- தொகை கொண்டதாக அவரவர் வருமானத்திற்கு ஏற்ப ஏதாவதொரு தொகை யாக இருக்கலாம். இவ்வாறு ஒரு குடும்பம் 12 மாதங்களுக்கு ஏதாவது ஒரு தொகையை தொடர்ச்சியாக செலுத்தல் வேண்டும்.

உதாரணமாக, இவ்வாறு வித்தியாசமான தொகையில் குடும்பங்கள் மாதாந்தம் செலுத்தும்போது சராசரியாக 300/- படி பார்த்தால் ஒரு குடும்பம் வருடாந்தம் 3600/- செலுத்தும். மேலே குறிப்பிட்ட 10600 குடும்பங்களுள் சராசரியாக 3000 குடும்பங்கள் 300/- படி செலுத்தினால் வருடாந்தம் ரூபா ஒரு கோடிக்குமேல் சேமித்து பொதுநிதியத்தை உருவாக்கமுடியும். வருடாந்தம் இவ்வாறு தொடர்ச்சியாக சேமிக்கும்போது இரண்டு மூன்று வருடங்களில் பெருந்தொகை பணம் நமது சேமிப்பாக இருக்கும்.

இது சாத்தியமாகுமா? என பலரும் கேட்கலாம். நாம் அனைவரும் ஒத்து நின்றால் ஏன் சாத்தியமாகாது. ஒரு குடும்பத்தால் மாதாந்தம் 100/- , 200/- ரூபா ஏன் செலுத்த முடியாது? இதை இன்னொரு வார்த்தையில் சொல்லப்போனால் நம்மை நாம் பாதுகாக்க நாம் செய்யும் “சேமிப்பே” எனலாம்.

**திடீர் அனர்த்தங்கள் ஏற்படும் போது நாமே தீர்மானம் எடுத்து நமது நிதியை நாமே பயன்படுத்தி நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள முடியும் அல்லவா?**

இது ஒரு முன்மொழிவு மாத்திரமே. இது பற்றி நாம் சிந்திப்போம்.

தற்போது இத்திட்டத்தை அமுல்படுத்த முடியாது. காரணம் நாம் அனைவரும் கொவிட்-19யினால் பாதிக்கப் பட்டுள்ளோம். நிலைமை சீரடைந்து, நோய்கள் அகன்று, சாதாரண நிலைமைக்கு நாம் திரும்பிய பின்பு இதனை அமுல் படுத்துவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் இதனை நாம் இலகுவாக அமுலாக்கமுடியும்.

**அவ்வாறு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கினால், உருவாக்கப்படும் நிதியத்துக்கான பாதுகாப்பு சட்ட வரையறைகள் பற்றி கூறுங்கள்?**

மூதூரிலுள்ள சமூக அங்கீகாரம் பெற்ற அனைத்து சமூக நிறுவனங்களும் ஒன்றிணைந்து ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்கென உபவிதிகளை உருவாக்கவேண்டும். அதனை அரசாங்கத்தில் பதிவு செய்ய வேண்டும். அதிலும் அதனை நாம் ஒரு Charity ஆக பதிவு செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்துகொண்டால் நிதிக்கான பாதுகாப்பு மற்றும் செலவுகளுக்கான வரையறைகள் அனைத்தும் சட்டரீதியாகி விடும். மக்கள் தங்கள் நிதிபற்றி அச்சம் அடையவேண்டிய அவசியம் இருக்காது.

**இந்நிதியை அனர்த்த விடயங்களுக்கு மாத்திரம்தான் பயன்படுத்த முடியுமா?**

இல்லை, இல்லை, அதனை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தொகையை அனர்த்தங்கள் ஏற்படும்போது பயன் படுத்துவதற்கென ஒதுக்கி வைத்துவிட்டு, மிகுதியை நாம் கல்வி, சுகாதாரம், கடும் நோய்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியும்.



sky தமிழ் NEWS

# துணிந்தெழு

**மத்திய கிழக்கு நாடான கட்டாரிலிருந்து இயங்கும் ஸ்கை தமிழ் நிறுவனத்தின் புதிய முயற்சி ‘துணிந்தெழு’ வாராந்த சஞ்சிகை ஆகம்.**

அரபு நாடொன்றிலிருந்து இப்படியான ஒரு தமிழ் சஞ்சிகை வெளிவருவது தமிழ் நெஞ்சங்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

ஸ்கை தமிழ் எனும் முகநூல் ஊடகம் 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை மிகவும் வெற்றிகரமாக நடை போட்டுக்கொண்டிருக்கிறது.



இலங்கையை மையப் படுத்தி வெற்றிகரமாக தனது பயணத்தை ஆரம்பித்திருக் கின்ற ‘**துணிந்தெழு**’ சஞ்சி கையின் முதலாவது இதழ் 30/01/2021 அன்று வெளியிடப் பட்டது. இது வாரந்தோறும் வெளிவருகின்ற சஞ்சிகை. குறிப்பாக, சமூகத்தில் மிக நீண்டகாலமாக வெற்றிகரமான பயணங்களை மேற் கொண்டு தமது வாழ்நாட்களில் சாதனைகளை நிலை நாட்டிய சாதனை நாயகிகளை கௌரவித்து அந்த சாதனை நாயகி களின் வாழ்க்கை வரலாறுகளை வெளியிடுகின்ற மிகப் பெரும் பணியை இச்சஞ்சிகை செய்ய ஆரம்பித்து இருக்கின்றது.



ஸ்கை தமிழ் பணிப்பாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஜெ. எம். பாஸித்



நுஸைலா பதுர்தீன்
இணையாசிரியர்



பாத்திமா ஷிப்னா ஆதம்
இணையாசிரியர்



றொஸான் முஹம்மட்



அஸ்வர் ரிஸ்வி

துணிந்தெழு சஞ்சிகை குழுவிற்கு கத்தார ் நாட் டின் இலங்கைக்கான தூது வரால் பாராட்டு கிடைத்த தருணம்.

ஸ்கை தமிழ் பணிப்பாளரும் ‘**துணிந்தெழு**’ மாதமிருமுறை ஒன்லைன் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான **ஜெ. எம். பாஸித்** தலைமையிலான சஞ்சிகை குழுவினர் மகளிர் தினமான திங்கட்கிழமை கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீனை கத்தார் நாட்டுக் கான இலங்கை தூதுவராலயத்தில் சந்தித்தனர். இதன் போது ‘**துணிந்தெழு**’ வாராந்த ஒன்லைன் சஞ்சிகை தொடர்பில் அதன் நிறுவுனர் ஜெ. எம். பாஸித் மற்றும் முகா மையாளர் **அஸ்வர் ரிஸ்வி** ஸ்கை தமிழ் உதவி முகாமையாள ரான **நுஸைலா பதுர்தீன்** ஆகியோருக்கு கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் பாராட்டுக்களை தெரிவித்தார். “துணிந்தெழு” சஞ்சிகையின் முதலாவது இதழில் அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி, சிரேஷ்ட எழுத்தாளர். “மின்னும் தாரகைகள்” நூலாசிரியர் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைனின் சாதனைப் பயணம் பதிவுசெய்யப் பட்டுள்ளது. அவரே முதல் சஞ்சிகையின் அட்டைப் பட அதிதி யாகவும் இடம்பெற்றுள்ளார். ஸ்கை தமிழ் “வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்” என்ற நாமத்தில் நேரலை காணொளி மூலம் பெண் ஆளுமைகளை நேர்கண்டது. அதன் பிரதி பலிப்பாகவே இச்சஞ்சிகை வெளியிடப் படுகிறது. ‘துணிந்தெழு’ வாராந்த சஞ்சிகையின் உத்தி யோகபூர்வ வெளியீடும், அறிமுகப் பிரதிகள் வழங்கும் நிகழ்வும் விரைவில் கட்டாரிலும், இலங்கை யிலும் நடைபெறவுள்ளதாக ஸ்கை தமிழ் பணிப்பாளரும் சஞ்சிகை ஆசிரியருமான ஜெ.எம்.பாஸித் தெரிவித்தார்.


மாதமிருமுறை வெளியிடப்படும் இச்சஞ்சிகை எப்போதும் பெண் ஆளுமைகளின் அடையாளமாக திகழும் என்றும் இச்சஞ்சிகையை http://news.skyrmediasl.com/epaper எனும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தும் பார்வை யிடலாம் என்றும் இச்சஞ்சிகை ஆசிரியர் ஜெ.எம்.பாஸித் மேலும் தெரிவித்தார். நாடு விட்டு நாடு சென்றும் தமிழ் வளர்க் கும் நம் இளைஞர்களின் இம்முயற்சியை பாராட்டுகிறோம். பெண் ஆளுமைகளை அடையாளப்படுத்து வதற்கென துணிந்தெழுந் துள்ள இந்த இளைஞர்களின் துணிச்சலை மெச்சுகிறோம்.

**கட்டார் நாட்டிலிருந்து வெளிவரும் “துணிந்தெழு” சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர வாழ்த்துகின்றோம்.**



**ஆசிரியர் குழு :**

எம்.நஸ்றீன் பானு
பாத்திமா சிரோணி
பஹ்ரியா பாயிஸ்
பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்
நியாஸ் பரீட் (சிராஜி) - கத்தார்
அகீப் நஸுர் - Graphic Designer
ஷஹ்னா ஸப்வான்
மஹ்ரூப் பௌமியா
எம்.ஜ.எம். முபீத்
எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்
ஷகீனா ஷாகிர்



# மூதூர் கல்வியின் நிலையும்

## கல்விக்காக திருகோணமலை நகரை நோக்கிய படையெடுப்பும்

தொடர் - iv

> இம்முறை வெளியான அடைவுகளின் அடிப்படையில் மூதூர் பிராந்தியம் போதுமான ஆளணி, பௌதீக வளங்களை கொண்டுள்ளபோதும் எம்மவர்களின் பிரம்மை காரணமாக திருகோணமலை, குருநாகல் போன்ற பகுதிகளுக்கும் அதிக செலவீனத்துடன் பிள்ளைகளைக் கற்பிக்க அனுப்ப முனைவது கவலையளிக்கும் செயற்பாடாகவே என்னால் கருதமுடியும். இம்முறை மருத்துவ பீடத்தில் எதிர்பார்த்திராத பின்னடைவை மூதூர் சந்தித்துள்ளது. அதில் குறிப்பாக வெளியூர் சென்ற மாணவர்களின் பெறுபேறுகள் பாரியதொரு பிறழ்வை வெளிக்காட்டியுள்ளது.

**வீ**டு வாடகைக்கு தேடும் ஒரு கூட்டத்தாரும், தனியாக வந்து விடுதிகள் தேடும் இன்னொரு கூட்டமும், வகுப்பு நடக்கும் இடம் தெரியாமல் தடுமாறும் மற்றுமொரு சாராரையும் எம்மால் காணக் கூடிய தாக இருக்கும்.




**ஏ.எஸ்.எம்.பாயிஸ்,**
**திட்டமிடல் பணிப்பாளர் ,**
**சுகாதார அமைச்சு, கி.மா**


இவர்களின் 90% மானோர்கள் மூதூரைச் சேர்ந்தவர்களாக இருப்பது ஒரு புறம் மகிழ்ச்சியைத் தந்தாலும் மறுபுறம் இவர்களை காணும் போது கவலையாகவும் இருக்கின்றது. வசதி களற்ற விடுதிகள், கட்டுப்பாடான வாழ்வு, பழக்கமற்ற நண்பர்கள் என்று ஆரம்பத்தில் பல இன்னல்களை அனுபவிப்பவர்களைக் காணக்கூடிய தாக உள்ளது.

மூதூரிலிருந்து சுமார் ஒரு வருடத்தில் 50-75 மாணவர்கள் திருகோண மலைக்கு கல்விகற்க வருகின்றனர். இவர்களில் 65% மானோர் தனியாக வருவதோடு, 35% மானோர் தங்களது பெற்றோருடன் வந்து சேருகின்றனர். தனியாக வருபவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கும் நல்லுள்ளம் படைத்த திருகோண மலை நகர வாசிகள் அவர்களின் நிலை கண்டு குறைவான கட்டணம் பெற்றாலும் 3 வேளை உணவு மற்றும் தேனீருக்காக 10,000 ரூபா - 12000 ரூபா வரை பெறாமல் இருக்க முடியாது. அவ்வாறு வந்து தங்கும் மாணவர்கள் நகரின் பல இடங்களுக்கு மாலை நேர வகுப்புக்களுக்காக செல்கின்றனர். பெருப்பாலும் விஞ்ஞான, கணிதப் பிரிவிற்கு வருகை தரும் மாணவர்கள் ஒரு பாடத்திற்கு இரண்டு இடங்களுக்கு செல்கின்றனர். 75 - 100 பேர்கள் அமரும் வகுப்புக்களுக்கு 1,000/= -1,500/= ரூபாவும் 50க்குள் அமரும் வகுப்புக்களுக்கு 1500/= - 2,000/= வரையான கட்டணங்கள் செலுத்தவேண்டியேற்படும். ஒருவர் ஆகக் குறைந்தது 6,000/=- 9,000/= வரை வகுப்புக்களுக்கு செலவிடவேண்டியேற்படும். அதே நேரம் பிரயாணம் மற்றும் ஏனைய செலவுகளுக்கு மாதம் 3,000/= தேவைப்படலாம். பெண் பிள்ளைகள் என்றால் முச்சக்கர வண்டிகளுக்காக ஒரு பாடத்திற்கு 500/= - 750/= வரை செலுத்த நேரிடலாம். இதன்படி முச்சக்கர வண்டிகளுக்காக மொத்தம் 2,500/= தொடக்கம் 3,000/= வரையில் ஒருவர் செலவு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு செலவுகளையும் கணிப்பிடும்போது, திருகோணமலை நகருக்கு கல்வி கற்க வரும் ஒரு மாணவருக்கு சுமார் ஆகக் குறைந்தது மாதம் 25,000/= தொடக்கம் 30,000/= ரூபா வரையான செலவு ஏற்படுகின்றது. இதே மாணவர் தனது தாயுடனும் தந்தையுடனும் வந்திருப்பாரேயானால் சாதாரண வீட்டு வாடகையுடன் சுமார் 35,000/ = தொடக்கம் 40,000/= ரூபா வரையில் செலவாகும். நாம் சாராசரி ஒரு மாணவருக்கு 30000/= எனப் பார்த்தாலும் சுமார் 50 மாணவர்கள் எனின் ஒரு மாதம் 1,500,000/= செலவாகுவதுடன் வருடம் ஒன்றிற்கு 1 கோடியே 80 இலட்சம் வீதம் அவர்களின் படிப்பு முடியும் வரையிலான சுமார் 2½ வருட காலத்திற்கு (30 மாதம்) 4.5 கோடி ரூபா செலவாகின்றது. அதாவது ஒரு மாணவனுக்கு 9 இலட்சம் செலவாகிறது. என்பதை நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இவ்வாறு செலவழித்தமையால் தான் எமது வலயம் தற்போது மாகாணத்தில் 1ம் இடத்திற்கு வந்திருக்கின்றது என்று நாம் திருப்திபடக்கூடியதாக இருந் தாலும் மாணவர்களுக்கும், எமது மக்களுக்கும் நேரிடும் கஷ்டங்களுக்கு தீர்வு காணவேண்டிய பொறுப்பும் எமது கல்விச் சமூகத்தின் மீது திணிக்கப்படு கின்றது.

செலவுகள் ஒருபுரம் இருக்க, திருகோணமலை நகருக்குள் பிரவேசிக்கும் எமது பாரம்பரியத்துடன் வளர்ந்த குழந்தைகள் நகரமயமாக்கத்திற்குள் ஈர்க்கப்படுவதும் அதன் விளைவுகளுக்குள் சிக்குண்டு மீள முடியாது தவிர்ப்பதும் கவணிக்கப் படவேண்டிய முக்கிய விடயமாகும்.

வளர்ச்சியடைந்த காலத்தில் தேடல்கள் நிறைந்த தேசத்தில் எமது கல்வி முன்னேறியுள்ள நிலையில் இவ்வாறான நிலைகளிலிருந்து மக்களை மீட்க வேண்டிய தேவை உள்ளது. 5ம் புலமைப்பரீட்சை, க.பொ.த (சா/த) மற்றும் உயவுதர பரீட்சைகளின் சித்தி வீதத்தை அதிகரித்தல் மற்றும் மூதூர் மக்கள் கல்விக்காக படையெடுப்பதையும் அவற்றிற்காக செய்யும் செலவையும் குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்டு அமுல்படுத்த வேண்டிய தேவையும் பொறுப்பும் எம்மீது சுமத்தப்படுகின்றது. எமது கல்விச் சமூகமே இது எமது சிந்தனைக்காக.

**4.5 கோடி செலவு**

**நகரமயமாக்கலுக்குள் சிக்குண்டுபோகும் எமது குழந்தைகள்**

**க.பொ.த உயர் தரத்தில் கிழக்கு மாகாணம் மூதூர் முதலிடம்**

**மூதூர் பிள்ளைகளே இதுவரை திருகோணமலையில் சிறப்பு சித்தி**

# அல்குர்ஆன்



இறை மறையாம் அருள் மறை
வழிகாட்டிடும் இவ்வுலகம் அழியும்
வரை....... சொர்க்கத்தின்
இன்பங்கள் பல .... வாழ்வில் வரும்
கஷ்டங்கள் சில... நரகத்தினுள்ளே
துன்பங்கள் பல..... இவ்வுலகே
மனிதனின் எண்ணங்கள் பல....
ஓதினால் நல்லவற்றை தொட்டுச்
செல்லும்.... இல்லையேல் தீயவற்றை
இட்டுச் செல்லும்...... இவ்வாறு
நல்லதை சொன்ன அருள் மறையை
ஏற்று வாழ் உன் மரணம் வரை....



**AF. Suthaif**
Grade -06
Al-Mina. M. V

# சமத்துவம்

ஆணுக்கு உரைக்கும் படி
ஆர்த்தெழுந்து போராடு
பெண்ணின் பேரழகு
அவள் வர்க்க உணர்வு என்பதை
ஆணுக்கு புரியவை !

மதம் தூங்கட்டும்
சாதி கரைந்து போகட்டும்
சமத்துவம் வாழட்டும்

தேசியக்கொடியில் பேதம் உண்டோ!
தேசிய இலச்சினையில் ஆண்-பெண் உண்டோ!
இல்லை, தேசிய கீதத்தில் தான் உண்டோ!
இவ்வாறு இருக்க பேதம் ஏனோ!

சமதர்மத்தை எதிர்த்தாயானால்
ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும்
பிறந்தவரோ நீ!
பெண்ணும் ஆணும் மனிதரென்று
உணர்ந்தவரோ நீ!

இரு சிறகுகளுக்கு ஒரே
அசைவின்றி வேறில்லை பின்பு
ஏன் இந்த வர்க்க பேதம்?

அனைவரும் சமமென சொல்லும்
நாளை நீ உருவாக்கும்
வறுமையெனும் நோயை உழைப்பால்
நீ அடித்து நொறுக்கு.



ரமீஸ் பாத்திமா ஷப்ணி
ந.உ. மகளிர் கல்லூரி
பெண்கள் பிரிவு

# இலக்கு!

சோர்ந்த மனமே........
எம் இலக்கை உயரச் செய்வதும் எம் வறுமை தான். அதிலிருந்து எம்மை விலகச் செய்வதும் எம் வறுமை தான்.

பணமும் அதிகாரமும் தான் இலக்கின் உயர்ச்சி என எண்ணாதே. உன் வறுமையும் உன் ஏக்கமும் தான் உன் இலக்கின் அடையாளம்.

அச்சம் என்பது உன் மனதில் ஏன்டா? உன் வறுமையே உன் இலக்கின் வாயிலடா? கலக்கம் அடையாதே மகனே! நீ கரைசேருவாய்.......

இலக்கை உயிராக என்னும் உனக்கு உன் வறுமை உயிர் நாடியாக இருக்கிறது. இவை இரண்டிலும் வென்று உன் முயற்ச்சியால் உன்னை நீ காண்.

**Hansul Meera Jawahir**
13 arts,
T/ An- nahar Maha vid



## பொது அறிவு

01) நாகரிகத்தின் தாய் என அழைக்கப்படும் நகரம் எது - பாரிஸ்
02) வானில் அடிக்கடி இடம்பெயரும் கோள் - புவி
03) உலகில் அதிகமாக உற்பத்தியாகும் மறக்கறி எது - வெங்காயம்
04) உலகின் சர்க்கரைக்கிண்ணம் என அழைக்கப் படும் நாடு எது - கியூபா
05) தன் உடல் அமைப்பை விட மிகப்பெரிய முட்டை இடும் பறவை எது - கிவி
06) ஐந்து கண்கள் உள்ள பறக்கும் உயிரினம் எது - தேனி
07) உலகின் முதலாவது பெருங்கடல் திருவிழா இடம்பெற்ற நகரம் எது - நியூயோர்க்
08) உலகின் மிகப்பெரிய பல்லி இனம் எது - கொமோடாடிராகன்
09) உலகின் மிக நீளமான கால்வாய் எது - வோல்கா - பால்டிக் கால்வாய்
10) மருத்துவ தாதி முறையை அறிமுகப்படுத்தியவர் யார் - நைற்றிங் கேள்

**A. Sanif Satha,**
**Grade -08**
**A.C. Road , Mutur**



## வாசிப்பு பற்றிய பொன் மொழிகள் :

- ஒரு நூலகம் திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படும். (விவேகானந்தர்)
- தான் தூக்கிலிடுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக் கொண்டிருந்தவர் ( பகத்சிங் )
- நல்ல புத்தகங்களை வாசிக்காத ஒருவன் வாசிக்க தெரியா தவனைவிட உயர்ந்தவனல்ல (மார்க் டிவைன் )
- உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அது போல மனப்பயிற்சி புத்தக வாசிப்பு ( சிக்மன் ப்ராய்டு )
- வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் ( நெல்சன் மண்டேலா )
- புரட்சி பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்கள் மட்டுமே ( லெனின் )
- எங்கே நல்ல புத்தகங்கள் எரிக்கப்படுகிறதோ அங்கே விரைவில் நல்ல மனிதர்களும் எரிக்கப்படுவார்கள் ( சேகுவாரா)
- ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கின்றான் வாசகன் அதனை முடித்து வைக்கின்றான் ( சாமுவேல் சான்சன் )

B. M. Samry
12 Arts
T/Mu /Al-Hithaya M. V



1.உலக சாதனை புத்தகம் கின்னஸ் வெளிவர தொடங்கிய வருடம் எது? 1955

2.உணர்வு அதிகமுள்ள கைவிரல் எது? சுட்டு விரல்

3.மின் குமிழில் பொதுவாக காணப்படும் வாயு என்ன? ஆகன்

4.சந்திரனில் அதிகமாக காணப்படும் பொருள் எது ? டைட்டானியம்

5.சிகிரிய ஓவியங்களை திருத்த உதவியவர் யார் ? மஞ்சு சிறி

6.உயர்ந்தளவிலான உவர்த்தன்மை மட்டத்துடன் கூடிய கடலாக இருப்பது எது? சாக்கடல்

7.இலங்கையில் டொல்பின் அதிகளவில் காணப்படத்தக்க கடல் வளம் எது ? கல்பிட்டி

8.சர்வதேச குடிநீர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது ? மார்ச் 22

9. இலங்கையில் சர்வஜன வாக்குரிமையை அறிமுகப்படுத்திய யாப்பு எது? டொனமூர் யாப்பு

10.பண்டைய இலங்கையில் கிராமசபை ஆட்சி முறையை ஏற்படுத்திய அரசன் யார் ? பண்டுகாபயன்

**Shafeek Leesha Kadin**
Grade - 03
Presbyterian girls school,
colombo



# மாணவர் மடல்



**WhatsApp - 074 081 878 2**

மாணவர்களாகிய உங்களின் ஆக்கங்களையும் இதில் பிரசுரிக்க விரும்பினால் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் மேலுள்ள வட்ஸ்அப் இலக்கத்துக்கு உங்கள் புகைப்படங்களுடன் எமக்கு தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்து அனுப்பி வையுங்கள்.

## கலை இலக்கியம் நிறைந்த மனிதனை உருவாக்குவோம்.

தமிழ் மாதாவின் கவி இலக்கியத்திற்க்கோர் களம் அமைப்போம். அதை கடைசிவரை காத்திட திடம் புகுவோம்.

கலை இலக்கியத்திற்கான கழம் எம் மொழி என் கவி துளிகளால் நான் இடும் மடல் இது. கவி இலக்கியம் தனை பரப்பிட எனக்கிந்த வரம். தமிழ் மொழியால் நான் பெற்ற வரம்.

செங்கதிர் பரப்பிடும் செந்தமிழ் - எம் தாய் என்போம். அதன் அற நெறி கலை இலக்கியம் காத்திடும் யுகம் படைப்போம்.

பஞ்சபாண்டவர்கள் கை தொட்ட கலை இது. இதன் கலை இலக்கியம் பலநூறு அவதாரம் பெற்றது. இயல்பிலே வீரத்தை அடித்தளமாய் இட்ட தமிழ்.

என் தாய் மொழி தமிழ் என நான் உரைத்திட, அதன் மேன்மைதனை இப்பாரினில் பறைசாற்றிட, அதன் கலை இலக்கியம் தனில் முழு மனிதம் அடைவோம் என்பேன்.

மொழிதனின் முதுமை அதன் கலை இலக்கியம் தனை சாரும். தாய் மொழி தமிழ் தனிலும் அதுவே முழ மனிதம் தனை உருவாக்கும்.

மொழிதனில் செம்மை, கருத்தினில் உன்மை,இயல்பினில் தாய்மை,அமைப்பினில் பசுமை, இவைதனை சுமந்ததில் தமிழுக்கு பெருமை.

கையடக்கி என்று தன்னை அறிமுகம் காட்டிய செல்லிடை எம் தாய் மொழிதனின் கலை இலக்கியம் தனை சாறாய் குடித்தமா இதில் வென்றது அயலவன் மொழிதானமா.

அன்னியன் அழித்திட சதி தீட்டிய எம் மொழிதனின் சிறப்பினை நாம் பறைசாற்றிட பல வழிதனில் உழைத்திடும் வரம் பெற இறைதனை துதித்திடுவோம். இதை காத்திட தமிழனாய் படை எடு என்பேன்.

பண்டு தொட்ட எம் மொழி
என்றும் பண்பற்று
போக விடேன்.
எம் மொழிதனின் சிறப்பினை
இப்பாரினில்
பறை சாற்றிடுவேன்.
உயிர் மூச்சாய்
சுவாசித்திடுவேன்.



தென்கிழக்கு வாசல் மருதூர்.
- ஜவ்சன் அஹமட்-

## தன்னம்பிக்கை

ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான். தரையைத் துடைத்துக் காட்டச்சொன்னார்கள் நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு இன்டர்வியூ கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈமெயில் முகவரி கேட்டார்கள் ஈமெயிலா? எனக்கு ஈமெயில் இன்டர்நெட்டெல்லாம் தெரியாதே என்றான் துடைக்க வந்தவன் "கம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விருப்புகிறவனுக்கு ஈமெயில் முகவரி இல்லையா? ச்சே! என்று அவனை அனுப்பி விட்டார்கள்.
வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை கையில் 10 ரூபாய் இருந்தது. அதனைக் கொண்டு மார்க்கெட்டில் வெங்காயம் வாங்கினான். பக்கத்துக் குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான். 10 ரூபாய் லாபம் கிடைத்தது. மீண்டும் வெங்காயம், மீண்டும் விற்பனை இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டார். இந்தச் சூழ்நிலையில் ஒரு வங்கிக் கணக்கு திறப்பது சம்பந்தமாக ஒரு வங்கி ஊழியர் அவரிடம் பேச வந்திருந்தார். அவருடைய ஈமெயில் முகவரி கேட்டார் வியாபாரி, "ஈமெயில் முகவரி இல்லை" என்று பதிலளிக்க ஈமெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா? உங்களுக்கு மட்டும் ஈமெயில், இன்டர்நெட்டெல்லாம் தெரிந்திருந்தால் ..? என்று ஆச்சரியமாய்க் கேட்டார் வங்கி ஊழியர். அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன். என்றார் வியாபாரி......!
வாய்ப்புக்கள் விலகும் போது கவலைப்படாதே.. எல்லாம் நன்மைக்கு என்று எண்ணி தொடர்ந்து முயற்சி செய்தால் மிகப் பெரிய வெற்றி உனக்காக காத்திருக்கும்...!



**IRSATH FATHIMA LUSMA,**
T/MU/AN-NAGAR G.M.V,
NEITHAL NAGAR,
(A/L) – 12 (ARTS)



## மனிதம் காப்போம்!

அன்பாய் இரு
மனிதம் காப்பாய்
ஆசை ஒழி
மனிதம் காப்பாய்
இசையில் மூழ்கு
மனிதம் காப்பாய்
ஈரடி கல்
மனிதம் காப்பாய்
உலகை இரசி
மனிதம் காப்பாய்
ஊருக்கு உழை
மனிதம் காப்பாய்
என்னை மற
மனிதம் காப்பாய்
ஏற்றம் கொள்
மனிதம் காப்பாய்
ஐயம் கொல்
மனிதம் காப்பாய்
ஒன்றுபட்டு வாழ்
மனிதம் காப்பாய்
ஓடி உதவு
மனிதம் காப்பாய் – மானிடா
மனிதம் காண்பாய்
மனிதன் கண்டு
மனிதன் ஆவாய்



ஜே.என்.அக்தாப்
அல்ஹிதாயா ம.வி
12 கலை பிரிவு

## ஒரு ஆணின் வாழ்க்கையை செழிப்பாக்கும் நான்கு பெண் உறவுகள்

1) **அவனைப் பெற்றவள்** - தாய் பத்து மாதம் கருவில் சுமந்து, பாசமாய் இவ்வுலக வெளிச்சத்தை காட்டியவள்

2) **அவனுடன் பிறந்தவள்** - தான் செய்த தவறுகளை எல்லாம் மறைத்து என்னை யாருக்கும் விட்டுக் கொடுக்காமல் பாதுகாத்த உயிர் உறவு

3) **அவனுக்காய் பிறந்தவள்** - என் இன்ப துன்பத்தில் எல்லாம் புதிய உயிரை உயிர்ப்பித்து அப்பா என்ற புனித பதவியை தந்தவள்

4) **அவனால் பிறந்தவள்** - நான் தலை தூக்கி நடக்க அவள் தலை குனிந்து நடந்தாள் என்னை பெருமைப்படுத்த அவள் துன்பப்பட்டால் என்னுடன் இருக்கும் வரையில்



எம்.சீ.அஸ்கா
மூதூர்
அல்மினா ம.வி





# "கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும் மானுடப் பண்புகளும் இலங்கையின் கல்வி முறைமையும்"

### - ஒரு தூரநோக்கான பார்வை



தொடர் - 03


**A. S. Mohammed Fousi**
B.A.Hons, M.A,PGDE
Teacher Educator (SLTES)
Lecturer - Uva NCOE Bandarawela.


1981 அண்டு கல்விக் கொள்கை அறிக்கையில் பல சிபாரிசுகள் செய்யப்பட்டிருந்தாலும் 1989 வரை அதன் சிபாரிசுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனினும், இருபத் தோராம் நூற்றாண்டில் ஏற்படக்கூடிய பொருளாதார விரிவாக் கத்திற்குத் தேவையான திறன்கள், மனப்பாங்குகள் கொண்ட மனித வளத்தை விருத்தி செய்யும் வகையில் கல்வி முறை யைச் சீர்திருத்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் பணி யாற்று வதற்கு ஜனாதிபதியின் துரித செயலணி (Presidential Task Force) 1996 இல் உருவாக்கப்பட்டது.

இதேவேளை, 1991 இல் அமைக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு இலங்கையின் கல்விக் கொள்கையை மனிதவள அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்தது. ஜனாதி பதியின் துரித செயலணியும் தேசியக் கல்வி ஆணைக்குழுவும் சேர்ந்து 1997 இல் இருந்து புதிய கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. மாண வர்கள், மாறிவரும் புதிய தேவைகளுக்கு முகங்கொடுக்கவும் புதிய நூற் றாண்டு, பொருளாதார மற்றும் தொழில் நுட்ப மாற்றங்களுக்குப் பொருந் தக்கூடிய மனித வளமாக இலங்கையரை மாற்றவும் இப்புதிய சீர்திருத் தங்கள் முனைந்து வருகின்றன. இவற்றிலெல்லாம் ஒருங் கிணைந்த பார்வையைச் செலுத்தும்போது இலங்கையில் நடை முறையிலுள்ள கல்வி முறையானது சிறந்த மானிடத்தை உருவாக்குவதற்கானதும் எதிர்கால வேலையுலகிற்குள் தரமான நிலையில் நுழைந்து கொள்ளச் செய்வதற்கானதுமான பெரு முயற்சிகள் என்றே சொல்லவேண்டும்.

இதனால்தான், பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் ணில் ஒன்றாக விளங்குகின்ற எழுத்தறிவு விடயத்தில் ஆசிய நாடு களில் இலங்கை 98 வீதத்தை இற்றைவரை தக்க வைத்துக் கொண் டிருப்பதும் ஆசிய நாடுகளிலேயே கிராமப் புறங்களில் நிறைவான முறையில் கல்வியை முன்னெடுத்துச் (நெசனல - அறிவகம் மூலம்) சென்றிருப்பதில் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டி ருப்பதும் சாத்தியமாகி இருக்கின்றமை பெருமைக்குரிய விடயங்க ளாகக் கொள்ளப்படுகின்றன.

சமூகக் கட்டமைப்புக்குள் வாழுகின்ற மனிதர்கள் தாம் சார்ந்த சமூகத்தோடு தொடர்புபடுகின்ற அரசியல், பொருளா தார, கலா சாரத் துறை களில் மாற்றங்களை எதிர்நோக்குகின்ற நிலை காணப் படுகின்ற இவ் வேளையில், கல்வித் துறையிலும் மாறுதல்களை அரவணைக்கும் ஆர்வத்துடனும் உத்வேகத்து டனும் இருப்பது குறிப்பிடத்தக்கது. "மாறுதல் என்பது இந்த செகத்தின் முதலாவது விதி" என்று பாரதி கூறுவ தற்கிணங்க, புவிக்கோளமானது தன்ன கத்தே அடக்கியுள்ள உயிரினங்களின் பன்முகப்பட்ட இயல்புக ளிலும் மாற்றங்கள் எற்பட வேண்டும்.

ஏனெனில், பேராசிரியர். எஸ்.தில்லைநாதன் அவர்கள் கூறுவது போல "ஒன்றிலே ஏற்டுகின்ற மாற்றமானது அதன் அடுத்த கட்ட வளர்ச்சி எனலாம்." ("புதுமைகளும் மாறுதல்களும்" என்ற கட்டுரை) இது கல்விக் கருவூலத்திற்கு மட்டும் விதிவிலக்கா னதன்று. கனந்தோறும் சிந்தனை மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண் டிருக்கின்ற இக்காலகட்டத்தில் காலத்தின் போக்கிற்கும் தேவை களுக்குமேற்ப கல்வி முறைமைகள், கொள்கைகள், வேலைத் திட்டங்கள், கற்பித்தல் முறைமைகள் என்பனவும் மாற்றியமைக் கப்பட வேண்டியதும் அவசி யமாகும். இல்லாவிட்டால் கல்வி மூலம் எதிர்பார்க்கின்ற மானிடத்தை இலங்கையில் நடைமுறை யிலுள்ள கல்வி வழங்கியுள்ளதா? என்ற வினாவிற்கான விடை எதிர்முகமானதாகவே அமைந்து விடும் என்பது தவிர்க்க முடியாது போய்விடும். இவற்றையெல்லாம் அடிமனதில் வைத்துக் கொண்டுதான் காலத்திற்குக் காலம் கல்விப் புலம் சார்ந்த, அறிவுத் துறையில் அதிக அனுபவமும் நிபுணத்துவ முள்ளவர்களால் பல கலைத்திட்ட மாற்றங்கள் மேற்கொள் ளப்பட்டு வந்திருப்பது கவனிக்கத்தக்கது.

கல்வியின் தலையாய இலக்குகளுள் ஒன்றாகக் கருதப் படுவது வாழ்க்கைப் பண்பு மேம்பாடு (Quality of Life) ஆகும். மனிதர் களிடத்தில் காணப்படும் ஆக்க மலர்ச்சியும் அவனது வாழ்க்கைப் பண்பு மேம்பாட்டுக்கு உதவுகின்றது என்று கூறும் போது அதனால் கிடைக்கப்பெறும் அனுகூலங்களின் வர்க்க நிலைப்பட்ட வேறுபாடுகளும் கருத்திலே கொள்ளப்பட வேண்டும். இத்தகைய வாழ்க்கைப் பண்பு வாழ்வின் தரமான அனுபவங்களுடன் இணைந்தவை. தரமான அனுபவங்களே கல்விச் செயற்பாடுகள், கலை இலக்கிய வெளிப்பாடுகள் என்ப னவற்றின் விருத்திக்கும் உயர்ச்சிக்கும் உந்து சக்திகளாக அமைபவை. இத்தகைய மேம்பாட்டை கல்வி முறைமை களில் முன்னெடுக்கப்படுகின்ற மாற்றங்களினூடாக எய்த நினைப்பதே கல்வியின் மூலம் சிறந்த மானிடத்தை அடைந்து கொள்வதற் கான பகீரதப்பிரயத்தனமாகக் கொள்ளலாம். இவற்றையே இலங் கையில் நடைமுறையிலுள்ள கல்வியானது அதனைப் பெறுபவர் களுக்கு வழங்கி வருகின்றமை மிகுந்த கவனத்திற்குரியது.

(பார்வை நீளும்...)

# சமூக வலைத்தளங்களை பற்றி தவறான எண்ணங்கள் இருக்கின்றதா? கவலை வேண்டாம் LinkedIn பயன்படுத்துங்கள்




ARM.Ashar
Hnd in IT


தற்கால உலகம் சமூக வலைத் தளங்கள் மூலமாக மாத்திரமே இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது யாவரும் அறிந்த ஒரு உண்மை. பல வகையான சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றது.

இருந்தும் அதிகமான மக்கள் சமூக வலைத்தளங்களைப் பற்றி தவறான எண் ணங்கள்தான் பேசிவருகின்றார்கள் அந்த வகையில் ஒரு பாதுகாப்பான அனைவ ருக்கும் பிரயோசனமான ஒரு சமூகவலைத் தளத்தைப் பற்றி கூறலாம் என்று நினைக் கின்றேன்.

லிங்டின் என்பது வணிக ரீதியான சமூக வலைப்பின்னல் தளமாகும். இத் தளத்தின் மூலம் வெவ்வேறு நாடுகளில் பணிபுரியும் நபர்கள், தொழிலதிபர்கள், சிறு தொழில் உற்பத்தியாளர்கள், பல்வேறு வகையான சேவையை அளிப்பவர்கள் என பதவிகளில் இருப்போர் அனைவரும் தத்தம் தொழில், வேலை, சேவை ரீதியாக இணைக் கப்பட்டு தத்தம் விபரங்களை பகிர்வதற்கு லிங்க்டுஇன் உதவுகிறது. இத்தளத்தின் மூலம் வணிகத்தொடர்புகள், தகவல் பரிமாற் றங்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் சிறப்பு



அறிமுகங்கள், புதிய தொழில் வாய்ப் புகள் போன்றவை எளிதாக கையா ளப்படுகின்றன.

மேலும் LinkedIn ஐ பயன்ப டுத்துவன் மூலம் தங்களுடைய வாழ்க் கையை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் என்பதால் அனைவரும் LinkedIn ஐ பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

# வெற்றியின் திறப்பு...!

*புத்தாண்டு பிறக்க வேண்டும்*

*பூமியில் புது வரவாய்*
*புத்தாண்டு பிறக்க வேண்டும்*
*பூப்பொழியும் பட்டாசுகள்*
*புன்னகையால் மலர வேண்டும்*

*தேன் கலந்த பண்டங்கள்*
*தெருக் காற்றில் கலக்க வேண்டும்*
*பொன்வண்டு ரீங்காரமாய்*
*புது வரவை ஏற்கவேண்டும்*

*சித்திரை கொண்டாடிட*
*சிறுவர் மனம் குளிர வேண்டும்*
*சீராட்டும் இயற்கையெல்லாம்*
*சிறப்பாக இயங்க வேண்டும்*

*மாற்றங்கள் மாறவேண்டும்*
*மக்கள் மனம் சிரிக்க வேண்டும்*
*அவள நோய் அவயினிலே*
*அடியோடு ஒழிய வேண்டும்*



சாலையூர் பொன்னாத்தி
ஜெயசிறி,
கட்டைபறிச்சான்.

# என் தாயவள்



ஆதவனார் எழு முன்னர்
அவசரமாய் நீ எழுந்து
ஆறு மணிக்கு கறி சோறு சமைத்து
ஏழு மணிக்கு
மலைக் காட்டில் நின்றவளே

தரை வழியே கல்லுக்குக்குத்து
நிரை வழியே கட்டைகுத்து
என என உதிரம் சிந்தி
நீ உழைத்து என்னை
அதி உயர்த்தினாய்
ஐந்து மணி வகுப்பிற்கு
அரட்டி அடித்து விரட்டிடுவாய்
அதன்பின்னே
நீ வருந்தி அழுவாய்
வெள்ளாடை அணிந்து வீதி வழியே
பெயர் சொல்லி
மகிழ்வாய் என்னவளே

உனக்காக
என்னிடம் உள்ளதுவோ
ஓர் ஆசை
நீ கொள்ளும் அவாவினை
நனவாக்கி
உனை வானமேடையில்
வைத்து பார்க்க



ஐசர் லீஸா

# கரைமேல் வாழ்க்கை

கடலுக்குப் போனவங்க
கரைசேர இல்லிங்க
சுனாமி வந்து அடித்ததா
சுறா வந்து கடிச்சதா

காலையில கஞ்சுமில்ல
மாலையிலசோறுமல்ல
பானையில அரசுமில்ல
பருப்புக்கூட மிஞ்சயில்ல

அயலமீன் பிடிக்கயில்ல
துடுப்புக்கூட தண்ணியில
கையில காசுமில்ல
கண்ணுல தூக்கமில்ல

வாழ வழியில்ல
வயிற்றில் பசிபுல்ல
அடம்பிடிச்சி அழும்புள்ள
அதுக்கு கூட பாலுமில்ல

வளவுக்கு வேலியில்ல
வயிறார தீண்டதில்லை
காணிக்கு வேலியில்ல
தோணியும் சொந்தமில்ல



மூதூர் இ.நளீம்

# யுத்த பூமிகளில் புணர்வாழ்வு தேடும் கண்கள்

மழை அழாமலேயே
மண் நனைந்து கொள்கிறது.
யுத்த பூமிகளில்....!

அங்கொன்றும் இங்கொன்றுமாய்
எந்தனை மரண ஓலங்கள்....
எத்தனை ஏக்கக் காயங்கள்....

இரத்த பூமிகளில்...
இரக்கமற்ற இரும்புச்சன்னங்களின்
வேட்டையாள்....??

மூச்சற்றுக்கிடக்கும் மனித உடலின்
பெறுமதி என்னவோ....!
அங்கு மரித்த உடலில்
சல்லாபித்துக் கிடக்கும்
ஊனுன்னிப் புளுக்களின்
வயிற்றுப் பசிக்குத்தான் தெரியும்.

மலர் மாலை அணியும் வயதுகளில்
அங்கோ....
மலர் வலையமே அணிவிக்கப்படுகின்றது.
அந்த அழக்குக் கன்னிகளுக்கு

திரும்பிப் பார்க்கையில்
தடுமாறுகிறேன்....

அங்கு....
பட்டம் கிழிந்து தரையில் விழுகிறது.
தவம் கிடந்து பெற்ற பிள்ளையின்
உடலோ...
வேட்டை நாய்களின் வெடிகுண்டுகளுக்கு
இறையாக்கப்படுகின்றது.

ஒன்றையொன்று
முந்தித்திச்செல்லும்
இரவு பகல்களின் போராட்டங்களில்
அமைதிக்கான....
எமது போராட்டங்களுக்கு
எப்போதுதான்
முற்றுப் புள்ளி வைக்கப்படுமோ...!

தினம் தினம்
கண்ணீர் அஞ்சலி செலுத்தும்
எமது கண்களுக்கு....
எப்போதுதான்
புணர்வாழ்வு கிட்டுமோ....!



Anas Azam
NDCT(Civil),HNDQS


உங்களது
கவிதைகளையும்
இப்பக்கத்தில் பிரசுரிக்க
விரும்பினால்
கீழுள்ள
WhatsApp இலக்கத்திற்கு
உங்கள் புகைப்படத்துடன்
எமக்கு அனுப்பி வைக்கவும்.
077 1663140


# கவலையை கிள்ளி விடு...!

*இவ்வையகத்தில் வாழ்கின்ற*
*ஒவ்வொரு மனிதனுக்கும்*
*கவலைகள் ஏராளம்...*

*நண்பா !*
*பரீட்சையில் சித்தியடையவில்லையா ?*
*பிடித்தது கிடைக்கவில்லையா ?*
*நினைத்தது நடைக்கவில்லையா ?*
*கவலையை கிள்ளி விடு ∴*
*நண்பா!∴*

*உற்றார் உறவினர்,*
*அக்கம் பக்கத்தினர்,*
*உன்னை மதிக்க வில்லையா...*
*தன்னந்தனாய்,*
*தனிமையில் தவிக்கிறாயா ..*
*கவலையை கிள்ளி விடு நண்பா..*

*உன் தோற்றத்தை பற்றியோ...*
*உன் செல்வத்தை பற்றியோ..*
*உனது குணத்தை பற்றியோ...*
*உனது நடத்தையை பற்றியோ ..*
*யார் என்ன சொன்னாலும்..*
*கவலையை கிள்ளி விடு நண்பா!*

*சாதிக்கவில்லையா ?*
*சரித்திரம் படைக்கவில்லையா ?*
*தொழில் கிடைக்கவில்லையா ?*
*பணம் சம்பாதிக்கவில்லையா ?*
*நீ எதிலிலும் வெற்றி பெறவில்லையா?*
*நீ அதிகம் தோல்விகளை சுமக்கிறாயா ?*
*கவலையை கிள்ளி விடு நண்பா!*

*நன்றி.*



பஹ்றியா பாயிஸ்
ஹெம்மாதகம.

# நம்பிக்கை

ஏதோ
ஒரு சமயத்தில்
நமக்கு
ஆறுதலாய் இருந்த
உறவுகள்
ஆயுள் முழுவதும்
நம்முடன் ஆறுதலாக
இருப்பார்கள் என்று
கண்மூடித்தனமாய்
நம்பிக்கை வைப்பது
நம்
முட்டாள் தனமே..!!



K.N.A. SAHL
PERIYAPALAM
MUTUR 05


முத்திதழ் குழுமத்தின் சார்பில்

# வாழ்த்துகிறோம்

## Department of Community Based Corrections

**சமுதாயம்சார் சீர்திருத்த வேலை பரிசோதகர்**






**Department of Community Based Corrections** திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற சமுதாயம்சார் சீர்திருத்த வேலை பரிசோதகராக இன்று 03.05.2021 கடமையை பொறுப்பேற்றிருக்கும் மூதூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், சமூக செயற்பாட்டாளருமாகவும், முத்திதழ் ஆசிரியர் குழாமில் ஒருவராகவும் கடமையாற்றிய **நவாஸ் ரௌசான் முஹம்மட்** அவர்களுக்கு எமது குழுமம் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, மென்மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று சமூகத்துக்குத் தொண்டாற்ற மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்திணைக்களத்தில் கடமையாற்றுவதில் இவரே முதன்முதலில் இந்நியமனத்தைப் பெற்று மூதூரின் முதன்மைப் பட்டியலில் வரலாற்றில் பதிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

---

# சட்டியும் சாடியும்



ஒரு நாள் ஒரு குயவன் தன்னிடமிருந்த சால், பானை, சட்டி, குடம், சாடி முதலிய அநேக மட் பாண்டப் பொருட்களை விற்பதற்காக கடைத் தெருவிற்கு கொண்டு வந்து வைத்திருந்தான். அவைகளில் சாடியானது, மற்றப் பாத்திரங்களைப் பார்க்கிலும் அழகாகவும், மினுமினுப்பாகவும் இருந்தது.

ஆனால் அது ஏனைய பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே பார்த்து நீ! ஒரு தாழ்ந்த சாதிப்பயல் நீ! மிகவும் கேவலமானவன் ஏழை எளியவர் வீட்டிலேயே வசிப்பவன் அவர்கள் உன்னை கௌரவமாக போற்றி வாழாமல் இழிவாகவும், அலட்சியமாகவும் உபயோகிப்பார்கள். ஆனால் ”நானோ! அப்படியல்ல உயர்ந்த சாதி உடையவன், பிரபுகள் வீட்டிலேயே வசிப்பவன்; என் மேல் மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய பரிமள புஸ்பங்கள், உயர்ந்த பொருட்களையும் வைப்பார்கள். நான் உயர்ந்த ஸ்தானத்தில் பொன்னைப் போல் போற்றப்படுவேன்.

ஆகையால் உனக்கு நான் பல்லாயிரம் மடங்கு உயர்ந்தவன்” என்று இகழ்ந்தது.


அதற்குப் பக்கத்தில் இருந்த சட்டியானது மனம் வருந்தி பின்வருமாறு சொல்லிற்று.

அடே...! மூடா....? நாம் இருவரும் ஒரே குழியிலிருந்து எடுத்த மண் தான். ஒரே குயவனுடைய கை வேலைதான். ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் நாம் இருவரும், நம் இனத்தவர்களும் உடைந்து போவது நிச்சயம். அப்போது நம்மை வெளியில் எறிந்து விடுவார்கள். அப்போ பல பேர் காலில் மிதிபட்டு மண்ணோடு மண்ணாகிப் புதைந்து கிடப்போம்.

குயவனுக்கு இஸ்டம் இருந்திருக்குமேயானால் என்னை உன்னைப் போலவும், உன்னை என்னைப் போலவும் தயாரித்திருக்கக்கூடும். அப்போது நீ ஒரு சட்டியாகவும், நான் ஒரு சாடியாகவும் இருந்திருப்பேன். ஆகையால் ஆராய்ந்து பாராமல் பெருமை பேச உனக்கு எப்படி வாய் வந்தது என்று கூறிற்று. சாடியோ பதில் கூற முடியாமல் அடங்கிற்று.

அது போல, இறைவன் எல்லோரையும் ஒரே அவையவத்தோடு படைத்திருக்க. விவேக சூனியர்கள் “தன்” பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தவர் என்பது போல உயர்ந்த சாதி என்றும், தாழ்ந்த சாதி என்றும் பேசிக் கொள்வது எவ்வளவு மூடத்தனம்.

ஒருவனுடைய உயர்வுக்கு அவனுடைய மதமும், குலமும் துணையி ருப்பதில்லை. அறிவிற் சிறந் தவர்கள் யாவராய் இருப் பினும் அவர்கள் உயர்ந்த சாதியே!... அறிவற்றவர்கள் எத்தகைய உயர் குலத்தில் இருப்பினும் வாழ்ந்தவர்களே!



**Najeeth Fathima Sanha**
T/Mutur Muslim Ladies College
Grade – 12 Art

எம்.எஸ்.எம். பிஸ்ரி
BBA, PGDE



பேராசிரியர்:
செ.சுந்தரலிங்கம்



மூதூர் தொகுதி இடைத் தேர்தல் (1962.06.28) வேட்பாளர், எலிசபெத் மகாராணியாருக்கு கணிதபாடம் கற்றுக்கொடுத்த கணிதப் பேராசிரியர்.

# பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்

பேராசிரியர் செல்லப்பா சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் உரும்பிராய் எனும் ஊரில் 1895.08.19 ல் பிறந்தார். இவர் யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி, கொழும்பு சென் யோசப் கல்லூரிகளில் கல்வி கற்றார். இங்கிலாந்து லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்து 1914 ம் ஆண்டு தனது 19 ஆவது வயதில் லண்டன் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொண்டு கணிதத்தில் Bsc (Hons) பட்டம் பெற்றார். இதன் பின்னர் உலகில் முதற்தர பல்கலைக் கழகமான Oxford University ல் கற்று கணிதத்தில் இரட்டை முதலாந்தர றைப் பொஸ் (Double First In Mathematics Tripos) எனும் உயர்தரப் பட்டம் பெற்றார்.

1920 ல் இங்கிலாந்து Grays Inn சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்ட வல்லுனரானார். இலங்கை ஆனந்தாக் கல்லூரியின் உப அதிபராகவும் பணியாற்றினார். மேலும் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியில் கணிதப் பேராசிரியராகவும், கணிதத் துறைத் தலைவராகவும் பதவி வகித்தார். பேராசிரியராகப் பணியாற்றும் போது அவர் சிறந்த அறிவாளியாக மதிக்கப்பட்டதுடன் மாணவர்களின் நலனுக்காகவும் உழைத்த பேராசிரியராகவும் போற்றப்பட்டார். குறிப்பாக இலங்கை ரயில்வே போக்குவரத்திற்கு நேரக்கணிப்பு முறையினை அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

பேராசிரியர் : சுந்தரலிங்கம் லண்டன் மகாராணியான எலிசபெத் மகாராணிக்கு (எலிசபெத் அலக்சாண்ட்ரா மேரி) கணிதப் பாடம் கற்றுக் கொடுத்தார். இதனால் இலங்கைத் தாய் திருநாட்டின் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தமிழ் பேசும் மகனொருவர் உலக மகாராணியாருக்கு கணிதம் கற்றுக் கொடுத்தவர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

**மகாராணியின் திருமணம் :**



எலிசபெத் மகாராணியார் 1926.04.21 இல் பிறந்தார். தனது 21 வது வயதில் பிலிப் - எடின்பரோ கோமகனை 1947.11.20 ல் திருமணம் செய்தார். மகாராணியின் திருமண வைபவம் மிகக் கோலாகலமாக நடைபெற்றது. உலக நாட்டுத் தலைவர்கள் மற்றும் விருந்தினர்கள் 2000 பேர் திருமண வைபவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இத்துடன் தனக்கு கணிதப் பாடம் கற்பித்த கணிதப் பேராசிரியர் : சுந்தரலிங்கம் அவர்களையும் விருந்தினராக அழைத்திருந்தார்.

**எலிசபெத் மகாராணியார் கையுறை அணி யாமல் கைகொடுத்து வரவேற்கப்பட்ட பேராசிரியர் : சுந்தரலிங்கம்**

எலிசபெத் மகாராணியாரை சந்திக்க வரும் விருந்தினர்களில் குறிப்பிட்ட சிலருக்கு அரச குடும்பத்தின் கௌரவம் வழங்குவதற்காக கைஉறை அணியாமல் கைகொடுத்து வரவேற்பது மகாராணியின் வழக்கமாக இருந்தது.

மகாராணியின் திருமணத்திற்கு அழைக்கப்பட்ட 2000 க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் அனைவரையும் செங்கம்பளம் விரிக்கப்பட்டு ஒவ்வொருவராக இன்முகத்துடன் கையுறை அணிந்தவாறு கைகொடுத்து வரவேற்றுக் கொண்டிருந்தார் மகாராணியார். இதன் போது தனக்கு கணிதப்பாடம் கற்றுத் தந்த பேராசான் சுந்தரலிங்கம் அவர்களுக்கு கைகொடுத்து வரவேற்கும் தருணம் வந்த போது, மகாராணியார் தான் அணிந்திருந்த கையுறைகளைக் கழற்றிய பின்னர் வெறுங் கையினால் தனது பேராசானை கைகொடுத்து வரவேற்றார்.

இந்நிகழ்வு மாணவி ஒருவர் ஆசிரியர் ஒருவருக்கு கொடுத்த அதி உயர் கௌரவமாகும். அதுவும் இலங்கை தமிழ் பேசும் மகனுக்கு கொடுத்த கௌரவம். இந்நிகழ்வு ஒரு சிறந்த மாணவர் மற்றும் ஆசிரியருக்கிடையேயான புரிந்துணர்வை எடுத்துக் காட்டுகின்றது.

1981 ல் எலிசபெத் மகாராணியார் விக்டோரியா அணைக் கட்டின் திறப்பு விழாவிற்கு இலங்கை வந்த போது அந்நேரம் யாழ்ப்பாணத்தில் தனது இறுதிக் காலத்தை கழித்துக் கொண்டிருந்த தனது பேராசானை சந்திப்பதற்கு முயற்சி செய்தும் நேரம் ஒதுக்கியும் அவரை சந்திக்க முடியாமல் போனதையிட்டு மனம் வருந்தினார்.

மேலும் மகாராணியார் கையுறை அணியாமல் அரச குடும்பம் மரியாதையை வழங்கியவர்களில் இலங்கை முன்னாள் ஜனாதிபதி மேதகு மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரபல மாணிக்கக் கல் வர்த்தகரும், கோடீஸ்வரருமான மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் அவர்களும் உள்ளடங்குவர்.

**மூதூர் தொகுதியின் 1960.07.20 பொதுத் தேர்தல் இரட்டை அங்கத்தவர் தொகுதி :**

இத்தேர்தலில் திருகோணமலையைச் சேர்ந்த திரு. டி. ஏகாம்பரம் (வீடு) 13304 வாக்குகள், ஜனாப். ஏ.எல். அப்துல் மஜீது (கை) 13247 வாக்குகள், ஜனாப். எம்.ஈ.எச். முகம்மது அலி (யானை) 11417 வாக்குகள், திரு : எச்.டி.எல். லீலாரத்ன (ஏணி) 7916 வாக்குகள், திரு : விக்டர் பெரேரா (வண்டில் சக்கரம்) 181 வாக்குகள் பெற்றனர். இவர்களில் திரு : டி. ஏகாம்பரம், ஜனாப். ஏ.எல். அப்துல் மஜீது BA ஆகிய இருவரும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

**மூதூர் தொகுதியின் 1962.06.28 இடைத்தேர்தல் வேட்பாளர் :**

1960.07.20 ம் திகதி பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்திற்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர் திரு : டி. ஏகாம்பரம் அவர்களின் மரணத்திற்குப் பிறகு 1962.06.28 ல் இவரின் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக இடைத்தேர்தல் நடாத்தப்பட்டது.

1962.06.28 ஆம் திகதிய இடைத் தேர்தல் மிகவும் பரபரப்பான தேர்தலாக காணப்பட்டது. இதில் 1952, 1956, 1960 மார்ச் பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஜனாப். எம்.ஈ.எச். முகம்மது அலி (வீடு) 14215 வாக்குகள், ஜனாப். எஸ்.ஏ. ஹமீட் (கை) 6903 வாக்குகள், திரு : எம். குணதிலக (வெள்ளி) 6040 வாக்குகள், இவர்களுடன் பேராசிரியர் : செ. சுந்தரலிங்கம் சூரியன் சின்னத்தில் களமிறங்கினார். தேர்தல் முடிவுகளின்படி ஜனாப் : எம்.ஈ.எச். முகம்மது அலி வெற்றியீட்டினார்.

பேராசிரியர் சுந்தரலிங்கம் 1943, 1944 ல் அரசாங்க சபைத் தேர்தலில் வெற்றி பெறவில்லை. ஆயினும் 1947 ல் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று வவுனியா தொகுதி பாராளுமன்ற பிரதிநிதியாகவும் வர்த்தக அமைச்சராகவும் இருந்தார். பின்னர் 1952, 1956 பாராளுமன்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். பின்னர் 1962 ல் நடைபெற்ற மூதூர் தொகுதி வேட்பாளராக சூரியன் சின்னத்தில் போட்டியிட்டார்.

பேராசிரியரின் அரசியல் மேடைப் பேச்சுக்கள் நகைச்சுவை மிகுந்தவையும் அனைவரையும் வசீகரிக்கும் பேச்சுக்களாகவும் இருந்தன. எலிசபெத் மகாராணியாருக்கு கற்பித்த பேராசிரியர், நாடறிந்த கல்விமான் என்பதனால் மக்கள் இவரது அரசியல் கூட்டத்திற்கு அணி திரண்டனர். ஆனால் தேர்தல் முடிவின்படி இவருக்குக் கிடைத்த வாக்குகள் வெறும் 423 வாக்குகள் மாத்திரமேயாகும். இவர் மூதூரை விட்டுச் செல்லும் போது தனக்கு வாக்களித்த “423 பேர்களும் தான் மனிதர்கள்” என்று கூறிவிட்டுச் சென்றாராம்.

கணித நிபுணராகவும், சட்டத்தரணியாகவும், அரசியல்வாதியாகவும் இருந்து சகலரதும் உரிமைக்குப் போராடி தனது வாழ்க்கையை அர்பணித்ததுடன், மூதூர் தொகுதியின் அரசியல் வரலாற்றில் தடம் பதித்த பேராசிரியர் : சுந்தரலிங்கம் அவர்கள் 90 வது வயதில் 1985.02.11 ம் திகதி வவுனியாவில் உயிர் நீத்தார்.

## மூதூர் பொழுது போக்கு பூங்கா தொடர்பான முறைப்பாடு



மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் இராணுவத்தினர் முறைப்பாட்டை விஷேடமாக எமது அலுவலகத்திற்கு பொறுப்பு வழங்கியதன் பிரகாரமும் முறைப் பாட்டாளர் சார்பாக அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கும் அமை வாக 2021. 05. 03 ஆம் திகதி எமது அலுவல கத்திலிருந்து MOH தலைமையில் பார்வை யிடச்சென்ற குழுவின் அறிக்கையின் படி ,

பொழுதுபோக்கு பூங்காவில் கொட்டப்பட்ட குப்பைகள் உக்காக்கழிவு , உக்கக்கூடிய கழிவு என தரம் பிரிக்கப்படாமல் கொட்டப் பட்டு மேலால் மண் இடப்பட்டுள்ளது என்ப தனை எம்மால் அவதானிக்க கூடியதாக யிருந்தது .

எனவே குப்பைகள் தரம்பிரிக்கப்பட வேண்டும் என்பதோடு எமது பொது சுகாதார பரிசோதகர் குழாம் பார்வையிட்டு எம்மால் அனுமதி வழங்கப்படும்வரை இவ்வேலையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பிரதேச சபையை அறிவுறுத்தியுள்ளோம்.

## மூதூர் பிரதேச செயலகத்தின் அன்றாட நடவடிக்கைகள்



மூதூர் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் முழுமையாக இடைநிறுத்தப்பட்டுள்ள தாகவும் பிரதேச செயலகத்தில் பணி புரியும் உத்தியோ கத்தர் ஒருவருக்கு கொரொனா தொற்றுள்ளதாகவும் தமிழ் வின் இணையத்தளத்தில் வெளியாகிய செய்தி தவறானதாகும். இது தொடர்பாக, குறித்த இணையத் தளத்திற்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தற்போது, திருகோணமலை மாவட்டத்திலும் மூதூர் பிரதேசத்திலும் வேகமாக பரவிவரும் கொரொனா தொற்றிலிருந்து பிரதேச மக்களை பாதுகாக்கும் நோக் கில் மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலொசனைக் கமைவாக, பொதுமக்களுக்கான சேவைகள் மாத்திரமே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. மூதூர் பிரதேச செயலகமானது வழமைபோல் மட்டுப்படுத் தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு தொடர்ந் தும் இயங்குகிறது என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.


## மீண்டும் மூதூரை ஆட்கொள்ளும் கொவிட் 19

நாடு முழுவதும் கொவிட் 19 பரவலானது சடுதியாக அதிகரித்து வருகின்றமை யினால் , மூதூர் பிரதேசத்தில் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக பின்பற்று மாறு மூதூர் சுகாதார வைத்திய பணி மனை ஒலிபெருக்கி மூலம் பொது மக்க ளுக்கு பொது அறிவித்தல் ஒன்றை விடுத் துள்ளது.

- கூட்டம் கூடுவதை தவிர்ந்து கொள்ளு மாறும்,
- முகக்கவசம் அணிந்து வெளியில் செல்லுமாறும்
- கைகளை நன்றாக சுத்தம் செய்து கொள்ளுமாறும்
- வீட்டில் இருக்கும்போதும் இடை வெளிகளைப் பேணிக்கொள்ளுமாறும்

மூதூர் மக்களை சுகாதார வைத்திய பணிமனை கேட்டுக் கொள்கின்றது.



முத்தித்தழ் செய்திகள்

## அமைச்சருடனான சந்திப்பு



மூதூரில் குடிநீர் வசதியினை இலவசமாக செய்து வரும் நீர்வழங்கல் அமைச்சின் மூதூர் தொகுதிக்கான இணைப்புச் செயலாளர் எஸ்.எச்.நியாஸ் தலைமையில் மூதூரிலிருந்து தலைமைத்துவக் குழு கடந்த (21.04.2021) ஆம் திகதி புதன் கிழமை நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ. வாசுதேவ நாணயக்கார அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து 01:30 pm மணியளவில் உத்தியோகபூர்வ சந்திப்பினை மேற்கொண்டனர்.

இச்சந்திப்பின்போது மூதூரின் எதிர்காலம், கிராம அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு சம்மந்தமாக கலந்தாலோ சிக்கப்பட்டு அதற்கான ஆவணங்களும் கௌரவ அமைச்சரிடம் கையளிக்கப் பட்டது. நீண்டநேர கலந்துரையாடலின் போது கௌரவ அமைச்சர் உங்கள் ஆக்க பூர்மவமான செயற்பாட்டை நோக்கும் போது பெருமையாகவும் ஆச்சரியமாகவும் உள்ளதாகவும் இனிவரும் காலங்களில் எனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளியாகியிருக்கும் 2020 A/L பரீட்சையில் சாதித்த மாணவர்களுக்கு கௌரவிப்பு MCQ அமைப்பு அறிவிப்பு!

- MCQ/OMC/SEEDA

மூதூரின் கல்வி வளர்ச்சியில் கடந்த 4 1/2 வருடங்களாக பல்வேறுபட்ட குறுகிய,நீண்ட கால திட்டங்களை செய்துவரும் கத்தார் வாழ் மூதூர் சமூகம் (Mutur Community Qatar-MCQ)மற்றும் கடல் கடந்து வாழும் மூதூருக்கான அமைப்பு (Overseas Mutur Community-OMC) ஆகியன இணைந்து வெளியாகிய A/L பரீட்சையில் மாவட்ட ரீதியில் சாதனை படைத்தவர்களை கௌரவிக்க முடிவெடுத்துள்ளது.

**இது தொடர்பில் அதன் தலைவர் Dr.சுபியான் அவர்கள் தெரிவிக்கையில்,**

மாவட்ட ரீதியில் A/L பரீட்சையில் எல்லா துறைகளிலும் முதல் மூன்று நிலைகளை பெறும் மூதூரைச் சேர்ந்த மாணவர்களுக்கு 10,000/= ரூபா அன்பளிப்பாக வழங்கப்படும். இதை தவிர மேற்படி மாணவர்களின் பொருளாதார நிலமையை ஆராய்ந்து வறுமை கோட்டின் கீழ் வாழும் கலை,வர்த்தகம்,தொழிநுட்ப துறை மாணவர்களுக்கு பல்கலைக்கழக முதலாம்,இரண்டாம் வருடத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா மாதம் இரண்டாயிரம் ரூபா அடிப்படையில் வழங்கப்படும்.

மேலும் உயிரியல் மற்றும் கணித பிரிவு மாணவர்களுக்கு மாதம் இரண்டாயிரம் அடிப்படையில் மூன்று வருடத்திற்கு 75,000ரூபா வழங்கப்படும்.



அந்தவகையில் சென்ற வாரம் வெளியாகிய உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் Bio Technology துறையில் திருகோணமலை மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மூதூர் மத்திய கல்லூரி மாணவன் Badursaman Sabreen Ahamed மற்றும் கணித பிரிவில் 3A பெற்று மாவட்ட ரீதியில் மூன்றாம் நிலை பெற்ற அல்-ஹிலால் பாட சாலை மாணவன் Lafeer Mohammed Theesan ஆகியோரை வாழ்த்துவதோடு தலா 10,000ரூபா அன்பளிப்பாகவும் வழங்கப்படவுள்ளது.

மேலும் இம்முறை வெளியாகிய A/L பெறு பேற்றின் மூலம் 'Poverty is not a hindrance to education' "வறுமை கல்விக்கு தடையில்லை' என்ற கத்தார் வாழ் மூதூர் சமூக அமைப்பின் கொள் கையை உறுதிப்படுத்தி சிறந்த பெறுபேறுகளுடன் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டி ருக்கும் Muhmeen Mohammed Salman என்ற மாணவனையும் நிறைவாக வாழ்த்தி 10,000ரூபா அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முகநூல் முற்றத்தில்






## முதலில் உயர்தரம் எழுதிய அனைவருக்கும் வாழ்த்துக்கள்

உயர்தரம் என்பதே கல்விவாழ்வில் மேலோங்கிய நிலைதான், அவர்களின் பெறுபேறென்பது முயற்சியின் அறுவடையும், இறைநாட்டமுமின்றி வேறேதுமில்லை.

பேசுபொருள் யாதெனில் பெறுபேறுகள் பின் நாம் புகழ்பாடுவதில் கூட இன்னும் இரண்டாம் பட்ச மனோநிலையில் இருந்து வெளியில் வரவில்லை என்பது தான்.

- விவசாயின் மகள் இந்தப் பெறுபேறு
- மீனவனின் மகன் அந்தப் பெறுபேறு
- நாட்கூலி...

இப்படியெல்லாம் புகழ்பேசுவதில் கூட அனுதாபத்தை இணைத்து விடுகின்றோம்.

மேற்குறித்த தொழில்கள் செய்வோர் மேற்கத்தேய (அவுஸ்திரேலிய, நோர்வே, சீனா) போன்ற நாடுகளின் மொத்த தேசிய வருமானத்தின் பெருவாரியானதை பெற்றுக் கொடுக்கும் கௌரவக் குடிகள்.

நாம் முதலில் தொழில்ரீதியான பகுப்பினால் வரும் இரண்டாம் பட்ச மனோநிலையைக் கைவிட வேண்டும். நாம் ஒவ்வொருவரும் இப்பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதிகள்.

"நிச்சயமாக நான் பூமியில் எனக்கான ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன்"
(சூரதுல் பகரா:30)




## நூற்றாண்டை நோக்கி நகரும் மூதூர் மத்திய கல்லூரி

மூதூர் தளவைத்தியசாலை அபிவிருத்திகள் தொடர்பிலான கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துக்கொரள

இன்று மூதூர் ஞுடீ அமைப்பின் மூதூர் அமைப்பாளர் ஆரடியசயம மற்றும் அதன் செயலாளர் ளோயச அவர்களின் தலைமையில் மூதூர் தளவைத்தியசாலையில் பிரதம அத்தியேகட்சகர் வைத்தியர் கயல்விழி அவர்களுடன் பாராளுமன்ற




உறுப்பினர் முயிடைய யுவாரமழசயடய மற்றும் மாவட்ட அதிபர் (புயு) ஞுயஅயடீ ஹுயசளாயடீய ‘யடீனைமுழசயடய அவர்களும் மூதூர் தளவைத்தியசாலை அபிவிருத்திகள், கொரோனா சூழ்நிலைமை மற்றும் கொரோனா கட்டுப்பாடுக்கான முன் ஆயத்தங்கள் தொடர்பில் அவசர கலந்துரையாடல் தளவைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொலிஸ் அத்தியேகட்சகர், பிரதேச திட்டமிடல் பணிப்பாளர், இராணுவ பொறுப்பதிகாரி மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.




## இலங்கையில் மிகப்பெரிய COVID-19 சிகிச்சை மருத்துவமனை

இலங்கையில் மிகப்பெரிய COVID-19 சிகிச்சை மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை இலங்கை ராணுவம் ஹம்பகா மாவட்டம் Seeduwa சீதுவ பகுதியில் நிறைவு செய்துள்ளது.

கொரோனா வைரஸின் மூன்றாவது அலை காரணமாக கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க படுக்கைகளின் தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

2500 படுக்கைகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த 3-4 நாட்களில் மேலும் 5000 படுக்கைகள் அமைக்கப்படவுள்ளது.

அவசர மருத்துவ வசதிகளுடன் ஒரே நேரத்தில் 1200 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இம்மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## Camlica Masjid - கம்லிகா மசூதி

துருக்கி தலைநகர் இஸ்தான்புல் நகரில் கம்லிகா மலை முகட்டில் கடந்த ஆறு ஆண்டுகளாக கட்டப்பட்டு வந்த கம்லிகா மசூதி வெள்ளிக் கிழமை இது போல் ஒரு ரமலான் மாதத்தில் 2019 ஆண்டு துருக்கி அதிபர் எர்துகானால் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 62,000 நபர்கள் தொழுகை நடத்தும் கொள்ளளவு கொண்டது.

இந்த மசூதியில் அருங்காட்சியகம், நூலகம், புகைப்பட காட்சியம் மற்றும் ஆலோசனை கூடம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

Çamlica Masjid ஒட்டமான் கட்டிடக்கலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மசூதி Bahar Mızrak மற்றும் Hayriye Gül என இரண்டு பெண் கட்டிட கலை வல்லுனர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது கூடுதல் தகவல். ஜா.சி



## உலருணவு பொதி விநியோகம்

மூதூர் YMMA (Young Muslim Man's Association) அமைப்பினூடாக இன்று நோன்பு பெருநாளைக் கொண்டாடும் வரிய குடும்பத்தைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்கு பெருநாளை மகிழ்ச்சியாக கொண்டாடும் நோக்குடன் உலருணவு பொதிகள் விநியோகம் செய்யப்பட்டது.

அவசர மருத்துவ வசதிகளுடன் ஒரே நேரத்தில் 1200 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இம்மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




முகநூல் முற்றத்துவெளியில் உங்கள் Facebook ஆக்கங்களும் இடம்பெற விரும்புகின்றீர்களா...?

#Muththithal #mmv/fb

என்று #(Hastag) செய்யவும்.



மேலதிகத் தொடர்புகளுக்கு : Muththithal முத்திதழ் என்ற fb Page ஐ நாடவும்

facebook


முத்திதழ் நீ நான் நாம்

# Eid Clicks



# க.பொ.த உயர் தரம் - 2020 இல் மூதூர் வலயத்தில் 3A சித்திகளைப் பெற்ற மாணவர்கள்


**L.M. Theesan**
Ph.Science / 03
T/Mu/Alhilal C.C


**T.F. Sahana**
Arts / 01
T/Mu/Fathima L.C


**P.K. Rifka**
Arts / - 10
T/Mu/Annahar GMV


**I.F. Riksa**
Arts /15
T/Mu/M.M.L.C


**S.Tharshini**
Art / 25
T/Mu/Senayoor CC


**R.A. Jasan**
Commerce / 18
T/Mu/Mutur C.C


**G.F. Sajitha**
Arts / 27
T/Mu/M.M.L.C


**A.M.Razan**
Arts / 31
T/Mu/Alhilal C.C


**B.F. Amana**
Arts / 32
T/Mu/M.M.L.C


**M.R. Sameeha**
Arts / 33
T/Mu/Al-Thaj M.V


**S.F. Ifra**
Arts / 36
T/Mu/Fatima MLC


**M.U.F. Afra**
Arts / 39
T/Mu/Fatima MLC


**A.Shimar Shahfy**
Arts / 46
T/Mu/Alhilal C.C


**A.R. Sameera**
Arts / 47
T/Mu/Fatima MLC


**R.F. Nusra**
Arts / 55
T/Mu/M.M.L.C


**T.F. Rifna**
Arts / 64
T/Mu/M.M.L.C


**J.F. Minha**
Arts / 66
T/Mu/Mutur C.C


**F.F. Rila**
Arts / 67
T/Mu/Fatima MLC


**K.R.F. Hazeema**
Arts / 88
T/Mu/Fatima MLC


**R.M. Rifkhan**
Arts / 13
T/Mu/Almina Vid.


**M.M. Aseem**
Arts / 92
N.U.A.C - Mutur

## மாணவர் சித்திரம்



Ilyas Fathima Irthaj
Alhithaya M.V - Grade 9



Fareed Rinosh
T/Mu/M.M.L.C - Grade 11




Afrin Manar
T/Mu/M.M.L.C - Grade 11




Mawsoor Haasni
Al-Mina M.V - Grade 03



NM. Afkar
Iqbal Road - Grade 9



Rajoon Ana Haani
T/Mu/MMLC, Grade 08



Mohmaed Mazeed
T/Jaya Vid, Grade 04

முத்திதழ் மாதாந்த சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற விரும்பினால் எம்மை அழையுங்கள்.
0771020030 / 0757575057



MODERN CONSTRUCTION
& CONSULTANT (PVT) LTD
TRUST BUILDERS
MODERN PLANNING
3D MODELING
075 75 77685
எமது சேவைகள்
அனைத்து வகையான கட்டடங்களும் நிர்மாணிக்கப்படும்
முப்பரிமான, உட்புற வடிவமைப்பு
கட்டடக்கலை, கட்டமைப்பு வரைபடம்
திட்ட மதிப்பீடு தயாரித்து வழங்கப்படும்
பொறியிலாளர்.கட்டகக்கலைஞரின் ஆலோசனைகள்
076 78 63296
உங்களது கட்டடம் கீழ்வரும்
வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும்
தேர்ச்சி பெற்ற பொறியிலாளர்களின் ஆலோசனைகள்
துரிதமான கட்டுமானப்பணிகள்
தரமான கட்டடப்பொருட்கள்
அனுபவமுள்ள வேலையாட்கள்
நவீன அலங்கார வேலைத்திட்டம்
info@modern-const.com
www.modern-const.com
Modern Construction & Consultant Pvt Ltd
- Batticaloa Road, Mutur, Trincomalee -




Quality Mart
EMERALD
VANTAGE
LAROUSSE
KIDSWARE
COSMETICS
BABYHUG
MOOSE
EBONY INNERS
MODERN
MENS WEAR & KIDS WEAR
WEDDING DRESS COLLECTION
QUALITY MART
வாழ்க்கைக்கோர் புது வடிவம்
CALL US NOW!
075 3111322
Batticaloa Road, Periyapalam. Mutur - 05




Best Quality
BMS
CONSTRUCTION
& Building Materials Supplier
கட்டுமான நிறுவனங்கள், அரச அரச சார்பற்ற கட்டுமான வேலைகள் மற்றும் சாதாரண உள்ளூர் கட்டுமான வேலைகளுக்குத் தேவையான பொருட்கள், சீமெந்து கல், கொங்கிரீட் தூண்கள் மற்றும் பலவற்றை தரமானதாகவும் மலிவானதாகவும் பெற்றுக்கொள்ள..
077 166 7660 | 075 53 10 813
Trincomalee Road, Mutur East




Pearl Grand
RECEPTION HALL
PEARL GRAND
Moments made Perfect
More Than You Expected
PEARL GRAND
Beyond your Expectations
✓ Newly Refurbished and Expanded Pearl Grand
✓ With state of the Art Technology
✓ Consisting of two story function halls
✓ Separate halls to accommodate Gents and ladies functions
✓ With the capacity to accommodate more than 1000 guests
✓ Celebrate with grandeur at pearl grand Make unforgettable memories with our outstanding service
✓ A perfect venue for a destination wedding
✓ All Covid 19 precautions are strictly in place with MOH approval
✓ Contact now to reserve your memorable events We are always on hand to assist with your perfect occasions
077 15 444 88 | 075 23 42 343
Pearl Grand
Knox Road, Mutur